21/11/03
நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி

Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(சு-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 26 (21.11.2003) வெள்ளிக்கிழமை இதழ் :52

# பேச்சுவார்த்தை தொடராத சூழ்நிலையில் போர்நிறுத்தத்தை கடைப்பிடிப்பது கடினம்

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன்

(ஒஸ்லோ)

**சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாத நிலையில் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப் பிடிப்பது சிரமமான காரியமாக இருக்கும் என்று, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.**

நேற்றைய தினம் ஒஸ்லோவில் ரொயடர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது நடைமுறையிலுள்ள போர்நிறுத்தத்தில் ஏற்படும் சிறு பிரச்சினைகள், பெரியனவாக மாறினால் அதனைத் தீர்ப்பது இயலாத காரியமாகும்.

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே பின்வாங்கியதற்கு இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியே காரணமாகும். எனவே இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர்



ரணில் விக்கிரமசிங்கவும் நெருக்கடிகளைக் கைவிட்டு சமரசத்திற்கு வந்தாலே (10 ஆம் பக்கம்பார்க்க)

## வன்னிவரும் ஐரோப்பிய யூனியன் அமைச்சர் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பார்

ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு அமைச்சர் கிறிஸ் பற்றன் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கொழும்பு வரவுள்ளதாக, ஐரோப்பிய யூனியனின் இலங்கைக் கான அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 4.55 மணிக்கு கொழும்பு வரும் இவர் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் இங்கு தங்கியிருக்கும் வேளை பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

இதன் முதற்கட்டமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரைச் செவ்வாய்க்கிழமை (10 ஆம் பக்கம்பார்க்க)

## 7 மேஜர்ஜெனரல் தர அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா சேவை நீடிப்பு!

(கொழும்பு)

இராணுவத்தின் ஏழு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிப்புச் செய்வதற்கான உத்தரவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்துள்ளார்.

ஓய்வுபெற்ற பின்னர், சேவை நீடிப்பு பெற்று, பதவியில் இருந்து வரும் ஏழு மேஜர் ஜெனரல்களுக்கே இந்தச்சேவை நீடிப்பு உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் உத்தரவின் பேரில், சேவை நீடிப்புப் பெற்றிருந்த ஏழு மேஜர் ஜெனரல்கள், உயர் நீதிமன்றம் அண்மையில், வழங்கிய தீர்ப்பினால் பதவி இழக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

இராணுவச் சட்டங்களை மாற்றி வைக்கும் (10 ஆம் பக்கம்பார்க்க)

## மாவீரர் தின நிகழ்வுக்கு படையினர் இடையூறாக இருக்க மாட்டார்கள்!

### படைத்தரப்பால் உறுதி தெரிவிப்பு

மாவீரர் தின நிகழ்வுகளை தமிழ் மக்கள் எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு படையினர் எவ்விதத்திலும் இடையூறாக அமையமாட்டார்கள் என, படை அதிகாரிகளால் விடுதலைப் புலிகளின் பிரநிதிகளிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

நேற்று, யாழ் மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே படைத்தரப்பு அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன், யாழ் மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர (10 ஆம் பக்கம்பார்க்க)

## அரசியல் முறுகல் நிலையை தீர்க்க பொ.ஐ.முன்னணியுடன் ஒப்பந்தம்!



# பொ.ஐ.முன்னணியுடன் ஒப்பந்தம்!


## ஐ.தே.க. தயாராக இருப்பதாக பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது எழுந்துள்ள அரசியல் முறுகலை தீர்த்துக் கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் எழுத்துமூல ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், நடைமுறைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஐக்கிய முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் பொது இணக்கமொன்றைக் காணவேண்டியது அவசியமாகும். இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவென இருதரப்பினராலும் நியமிக்கப்பட்டுள்ள - மலிக் சமரவிக்கிரம மற்றும் மனோ தித்தவெல ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம்பார்க்க)



மாவீரர்தின நிகழ்வு தொடர்பாக நேற்று படையினருடனான சந்திப்பை முடித்த பின்னர், அது தொடர்பாக செய்தியாளருக்கு விளக்கமளிக்கிறார் தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன். அருகில் யாழ் மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணனையும் காணலாம்.

# புதிய வரவு செலவுத்திட்டமானது அரசின் தோல்வியை காட்டுகிறது

## விமல் வீரவன்ச கூறுகிறார்

பொதுமக்களுக்கு அதிக நலன்களை வழங்குவதாகத் தெரிவித்த, அரசாங்கத்தின் தோல்வியையே - புதிய வரவு செலவுத்திட்டம் காட்டுகிறது என்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற கருத்தின் அடிப்படையிலேயே, அரசின் திட்டங்கள் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் (10 ஆம் பக்கம்பார்க்க)

**உள்ளே**

நமது ஈழநாடு நடத்திய 5 ஆம் ஆண்டு மாதிரி புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஒரு தொகுதி மாணவர்களின் பெயர் விபரம் 2 ஆம் பக்கத்தில்.

## ஜனாதிபதி சந்திரிகாவும் - பிரதமர் ரணிலும்

# அரசியல் கருத்துவேறுபாடுகளை களைந்து புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்!

## ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி வலியுறுத்து

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான அரசியல் கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று, ஜப்பான் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

ஜப்பானிய அரசின் இந்த நிலைப்பாட்டை - இலங்கை சமாதான முயற்கள் தொடர்பான ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி நேற்று ரோக்கியோவில் வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளம் அமைக்கப்பட (10 ஆம் பக்கம்பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1753)

# பளைப் பிரதேசத்தில் மரநடுகைத் திட்டம்!

(தென்மராட்சி)

பளைப் பிரதேச வனவளப் பாதுகாப்புப் பிரிவினரின் செயற்திட்டத்தின் கீழ், பளை அரசியல் துறையினர் மற்றும் பளை பிரதேச சபையினர் இணைந்து ஏ-9 வீதியின் இருமருங்கும் மரங்களை நாட்டிவருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை - பளை நகரப் பகுதியில், பளைப் பிரதேச அரசியல துறைப் பொறுப்பாளர் வின்சன், சமண்டலை இன மரக்கன்றை சம்பிரதாயபூர்வமாக நாட்டி மேற்படி திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பளை மத்திய கல்லூரியிலும் மரக்கன்று நடும் நிகழ்வு இடம்பெற்றது.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பளைப் பிரதேசத்தில் ஏ-9 வீதியின் இருமருங்கும் நின்ற பல நூற்றுக்கணக்கான பயன்தரு மரங்கள் இராணுவத்தால் அழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனை நிவர்த்தி செய்யுமுகமாகவே வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்நாட்டிலிருந்த அகதிகள் தலைமன்னாருக்கு வருகை

இந்தியாவின் நாமக்கல் அகதி முகாமிலிருந்து 8 இலங்கை அகதிகள் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தியாவிலுள்ள நாமக்கல் அகதி முகாமில் இருந்து படகுமூலம் தலைமன்னார் கடற்கரையை வந்தடைந்த இவர்களில் 4 ஆண்களும், 4 பெண்களும் அடங்குவர்.

இந்த எட்டுப்பேரும் கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இவர்கள் அனைவரையும் அப்பகுதிகளுக்குரிய கிராம சேவகர்களூடாக அவர்களுடைய சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

## நமது ஈழநாடு நடத்திய தரம் ஐந்து மாணவர்களின் மாதிரி பரீட்சை பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|
| **சுண்டுக்குளி மகளிர் கல்லூரி** | |
| 01. பி.சோமா | 100 |
| 02 ஜெ.விதுஜா | 100 |
| 03. .வினோஜா | 101 |
| 04. சி.நிலானி | 115 |
| 05. சு.பிருதிவி | 115 |
| 06. ஆ.நிருஷா | 105 |
| 07. இ.பிருதுஷா | 110 |
| 08. தே.சுகிர்தா | 100 |
| 09. ச.கனிமொழி | 102 |
| 10. சஜிதா | 103 |
| 11. யோ.தர்சனா | 100 |
| 12. எஸ்.அபிஜா | 142 |
| 13. ஜெ.லக்ஷி | 109 |
| 14 இ.தட்சாயினி | 101 |
| 15. வே.சரண்யா | 118 |
| 16 வ.மகிசாளினி | 113 |
| 17. வ.சாருகா | 108 |
| 19. பி.அஜிலா | 110 |
| 20. யோ.புவிதா | 108 |
| 21. உ.ஜெபப்பிரியா | 105 |
| 22. த.திலக்ஷி | 100 |
| 23. கிறேஸ் | 103 |
| 24. மு.கோபிகா | 115 |
| 25. சி.சதீசியா | 104 |
| 26. சா.மதுரமி | 124 |
| **புனித ஜோன் பொஸ்கோ** | |
| 27 சி.கிரிஷாந்த் | 116 |
| 28. பா.சிறிபவன் | 111 |
| 29. பு.வினோத் | 139 |
| 30. ந.விதுஷன் | 134 |
| 31. வ.விவாஸ்கர் | 129 |
| 32. சி.அமுதீசன் | 142 |
| 33. ச.லிங்கப்பிரசாத் | 106 |
| 34. ர.சிந்துஜன் | 150 |
| 35. சு.மயூரன் | 128 |
| 36. ம.வித்தகன் | 136 |
| 37. பி.ஏ.ஹட்சன் | 113 |
| 38. சைலேந்திரா | 100 |
| 39. ஜோ.அன்றுவசந்தன் | 159 |
| 40. ஸ்ரீ.சரத்றொசான் | 133 |
| 41. வி.மகிழன் | 156 |
| 42. க.கபில்றாஜ் | 104 |
| 43. அ.லதாங்கன் | 119 |
| 44. பா.கிருஷாந் | 132 |
| 45. வி.விதுஷன் | 155 |
| 46. நா.ஜகீர்த்தன் | 127 |
| 47. தே.சாருஜன் | 117 |
| 48. வை.கிருஷாந்தி | 121 |
| 49. ஜெ.ஜெனனி | 134 |
| 50. ம.வைஷ்ணவி | 110 |

(தொடரும்...)

## இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில்

# யாழ். மாவட்ட இளைஞர்களுக்கான உளவியல் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழப்பாணம்)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் இன்றுமுதல் யாழ். மாவட்டம் முழுவதும் இளைஞர்களுக்கான உளவியல் வழிகாட்டல் மற்றும் தொழில் வாண்மை விருத்திக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் - 'இளைஞர்களுக்கான முரண்பாடுகளும், பேசித் தீர்த்தலும்' என்னும் பொருள்பற்றி ஆராயப்படவுள்ளது.

முதலாவது கருத்தரங்கு இன்று தெல்லிப்பளை சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகத்தில் - சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 23 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், 26 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியிலும், 28 ஆம் திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், 29 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், அடுத்த மாதம் 9 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்குகள் காலை 9 மணிமுதல் மாலைவரை தொடருமென, யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தின் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார். (ப)

### ஆலயத்திற்கு காணி கொள்வனவு

(மானிப்பாய்)

சுதுமலை ஞானவைரவர் ஆலயத்திற்கு அவ்வூர் இளைஞர்களின் முயற்சியால் 1 1/2 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சுதுமலைப் பகுதியில் வசிக்கும் மக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்தே ஆலயத்துக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (44)

# சின்னஞ் சிறு செய்திகள்

### மயக்கமடைந்து வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மாதாந்தம் நடைபெறும் 'கிளினிக்' சிகிச்சையினை முடித்துவிட்டு சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்தச் சென்ற வயோதிபர் அந்தக் கடையில் மயக்கமடைந்து வீழ்ந்து மரணமடைந்தார்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலி பாற்பண்ணையைச் சேர்ந்த சச்சியானந்தம் பொன்னுப்பிள்ளை (வயது 78) என்பவரே மரணமானவராவார்.

### புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ். வலயக் கல்வி மேம்பாட்டு பேரவையினால் - நெடுந்தீவு பாடசாலைகளில் இவ் வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளது.

இவ் வகுப்புகள் இன்றும் நாளையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகுப்புகள் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் நெடுந்தீவிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

கல்வி மேம்பாட்டு பேரவையின் வள அணியினர் மூன்று பேர் இந்த வழிகாட்டல் வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

### கடற்தொழில் சங்கங்களுக்கு கடன் வசதி

வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு நிகொட் திட்டத்தின் கீழ் யு.என்.டி.பி நிறுவனம் 30 மில்லியன் ரூபாவை சுழற்சிமுறைக் கடனாக வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள 15 கடற்தொழிலாளர் சங்கங்களுக்கும் தலா 20 லட்சம் வீதம் 30 மில்லியன் ரூபாவை சுழற்சிமுறைக் கடனாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினூடாக வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் சமாச உப தலைவர் ந.குகானந்தம் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (17)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
லக்கிஸ்ரார் அஜித்,
மீராஜஸ்மின், கபாலி நடித்த
ஆஞ்சநேயா
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1751)

நிறஞ்சனாஸ் சங்கானை
ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த ஆல்பம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
DOUBLE JEODARDY
(சி-1752)

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று இன்று நடைபெறவுள்ளது. நல்லூர் முன்பள்ளி ஆசிரிய சங்க ஏற்பாட்டில் மாலை 3 மணியளவில் நல்லூரிலுள்ள முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் - அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ச)

### இலவச சித்த வைத்திய சேவை

நடமாடும் இலவச சித்த வைத்திய சேவை - இன்று மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்படவுள்ளது. ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளியில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ சேவையில், சித்த ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தினரால் ஆயுள்வேத மருத்துவ ஆலோசனையும், ஆயுள்வேத மருந்துகளும் வழங்கப்படவுள்ளதாக, மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (91)

### பொது அறிவு போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் சிசு உதானப் பிரிவினரால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகளின்படி யாழ். இந்துக் கல்லூரி 140 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணக் கல்லூரி 115 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி 100 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

### தேசிய சேவை ஒலிபரப்பு வடபகுதியிலும்

(கொழும்பு)

யாழ்குடாநாட்டு மக்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசியசேவை நிகழ்ச்சிகளை இன்று முதல் கேட்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

மத்திய அலைவரிசையில் 875 கிலோஹேட்ஸ் ஊடாக நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸிற்கு ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.



யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வாகனம் நிறுத்த தடைசெய்யப்பட்ட இடங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பொலிஸார் வாகனத்தில் ஏற்றிச்செல்வதை படத்தில் காணலாம்.

## சமாதான முயற்சியிலிருந்து நோர்வே விலகியமை

# ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை என்கிறார் அநுரா பண்டாரநாயக்க!



(கொழும்பு)

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே தற்காலிகமாகப் பின்வாங்குவது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகாவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்- ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க.

இது குறித்து நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சரான விதார் ஹெல்கிசன் மீது அதிருப்தி தெரிவித்த அநுரா பண்டாரநாயக்க , ஹெல்கிசன் தமது பின்வாங்கல் தொடர்பாக, ஜனாதிபதிக்கு எதுவும் தெரிவிக்கவில்லை. ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, அவர்கள் சமாதான முயற்சிகளிலிருந்து தாம் தற்காலிகமாகப் பின்வாங்கவுள்ளதை தெரிவித்திருக்கவேண்டும். ஆனால், நோர்வேயின் இந்தத் தற்காலிகப் பின்வாங்கல் தொடர்பாக, நாம் ஊடகங்கள் மூலமாகவே அறிந்துகொண்டோம்.

சமாதான முயற்சிகளை முதன்முதல் ஜனாதிபதியே ஆரம்பித்து வைத்தவர். எனவே, நோர்வே தமது தற்காலிகப் பின்வாங்கலை ஜனாதிபதிக்குக் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கவேண்டும்.

தற்போதைய சமாதான முயற்சியில், இந்தியா மத்தியஸதம் செய்து, பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். நாம் இதுதொடர்பில் நோர்வேமீது எதுவித வருத்தமும் கொள்ளவில்லை. ஏனெனில், இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகப் பல நாடுகளில் ஈடுபட்டு, நோர்வேக்கு நிறைய அனுபவம் உள்ளது. ஆனாலும் நாம் ஏன் இந்தியாவைக் கேட்கிறோம் என்றால், இந்தியா எமது அயலவர். இலங்கையில் நடக்கும் இருபதுவருட நீண்டபோரில், இந்தியாவும் பாதிப்படைந்துள்ளது. எனவே, இது தொடர்பாக இந்தியா சாதகமான ஒரு முடிவை பொறுப்புணர்வுடன் எடுக்கும் என நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார்.

### தனியார் மின்விநியோகத்தை மாகாணசபை இடைநிறுத்தியது

(கொழும்பு)

தனியாரால் அமைக்கப்படவிருந்த மின்விநியோகத் திட்டத்தினை ஊவா மாகாணசபை இடைநிறுத்தியுள்ளது.

ஊவா மாகாணத்தில் பொடிரணை என்ற இடத்திலேயே இந்தத் திட்டம் அமைக்கப்படவிருந்தது.

இந்த மாகாண சபையில் இந்தத் திட்டத்தினைச் செயற்படுத்தக்கூடாதெனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுளதாகவும் -

இது தொடர்பாக ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞான ரீதியான கணிப்பீடு ஒன்று எடுக்கப்படும்வரை இது நடைமுறைப்படுத்தப்படமாட்டாதெனவும் ஊவா மாகாணசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## இந்து சமுத்திரத்துக்கான பிரெஞ் தளபதி போர்க்கப்பலில் கொழும்புக்கு வருகிறார்!


பிரெஞ் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நல்லெண்ண விஜயமாக நாளை கொழும்புத்துறைமுகத்துக்கு வரவுள்ளது. 'மார்னே' என்ற இந்தப் போர்க்கப்பலில் பிரெஞ் கடற்படையின் இந்து சமுத்திரத்திற்கான கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் ரிச்சர்ட் வில்மோர் ருசெல்லும் கொழும்புக்கு வரவுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை கொழும்பில் தரித்து நிற்கும் இந்தக் கப்பலின் முதலாவது அதிகாரியாக வைஸ் அட்மிரல் ருசெல் 1997 ஆம் ஆண்டு பொறுப்பேற்றிருந்தார்.

வைஸ் அட்மிரல் ருசெல் கொழும்பில் தங்கியிருக்கும்போது, கடற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு நடத்துவார் என்று பிரெஞ் தூதரகம் அறிவித்துள்ளது.

'மார்னே' என்ற இந்தப் போர்க்கப்பல் 158 மீற்றர் நீளமானதும் 22 மீற்றர் அகலமுடையதுமாகும். 18 ஆயிரம் தொன்னுக்கு மேற்பட்ட எடையைக்கொண்ட இந்தக் கப்பலில் 13 அதிகாரிகள் உட்பட 177 கடற்படையினர் இருக்கின்றனர்.

இந்தக் கப்பலின் கப்டனாக கொமாண்டர் ஹோங் போய் இருக்கின்றார். இதேவேளை, கொழும்புத் துறைமுகத்தில் பிரெஞ் போர்க்கப்பல் தரித்துநிற்கும்போது, அடுத்தவாரம் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படும் என கடற்படை பேச்சாளர் கொமடோர் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.



2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோது, பிரதமர் ரணில் விக்கிமரசிங்க, அமைச்சர் லொக்கு பண்டாரவுடன் உரையாற்றுவதை முதற்படத்திலும், விவாதத்தில் அமைச்சர்கள் - அஸ்வர் மற்றும் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோர் குறுக்கிட்டுப் பேசுவதை இரண்டாவது படத்திலும், சபையில் குழப்பம் நிலவியபோது - ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### ஐரோப்பிய ஒன்றிய

# வெளியுறவு ஆணையாளர் கொழும்புக்கு வருகின்றார்!

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ்தோப்பர் பற்றன் - எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரண்டு நாட்கள் கொழும்பில் தங்கியிருக்கும் கிறிஸ்தோப்பர் பற்றன்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ரிரோன் பெர்னாண்டோ, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்களையும், சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார்.

### பல்கலைக்கழகங்களுக்கு 10 லட்சம் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கென ஒவ்வொரு பல்லைக்கழகத்திற்கும், தலா 10 இலட்சம் ரூபா இவ்வாண்டிறுதிக்குள் வழங்கப்படும் என, மூன்றாம் நிலைக் கலவி அமைச்சர் ஹபீர் காஸிம தெரிவித்தார். நேற்றுமுன்தினம் வடமேல் மாகாண பல்கலைக்கழக மாணவர் மத்தியில் உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பல்லைக்கழத்தின் வளர்ச்சிக்காக 61 கோடி ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளதாகவும், பல்லைக்கழக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தென்மராட்சிப் பகுதியில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிப்பு

தென்மராட்சியின் அனைத்து பிரதான வீதிகளிலும் முன்னரைக் காட்டிலும் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அண்மைக்காலமமாக ஏ - 9 வீதியிலும் ஏனைய பிரதான வீதியிலும் இராணுவத்தின் அளவும், அவர்களின் ரோந்துக்களும் அதிகரித்துள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. இந்த நடவடிக்கை ஏ - 9 வீதியில் குறிப்பிடக்கூடியதொன்றாக காணப்படுகின்றது.

எதிர்வரும் மாவீரர் தின்த்திற்காகவோ அல்லது பாதுகாப்பு அமைச்சின் மாற்றத்தின் விளைவாக இது இருக்கலாமென, மக்கள் சந்தேகிக்கின்றனர். அத்துடன் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் ஓர் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது.

(25)

# குற்றச்செயலைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உத்தரவு!

### ஜனாதிபதி சந்திரிகா விடுத்தார்

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைத் தடுக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா - பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பொலிஸ் உயர அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது -

நாட்டில் தற்போது பல்வேறு குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன.

இவற்றைத் தடுப்பதற்குப் பொலிஸார் விழிப்புடன் செயற்படவேண்டும். இந்தக குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்து சிறந்ததொரு ஆலோசனையை, பொலிஸ் திணைக்களம் விரைவில் என்னிடம் சமர்ப்பிக்கவேண்டும்

அதனை ஆராய்ந்த பின்னர், அது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டு, பொலிஸ் சேவையில் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. நாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவையே மிக முக்கியமானதாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயில் சேவையை விஸ்தரிக்க இந்திய அரசாங்கம் நிதியுதவி!

(கொழும்பு)

இலங்கையின் ரயில் சேவையினை மீளவும் நிர்மாணிப்பதற்கு, இந்திய அரசினால் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியுதவியின்மூலம் - ரயில் நிலையங்கள், பாதைகள் என்பன முன்னுரிமை அடிப்படையில் திருத்தப்படவுள்ளன. அத்துடன், பாதுகாப்பான ரயில்வேக் கடவைகள், சமிக்ஞைகள் என்பன விஸ்தரித்து அமைக்கப்படுவதுடன், தாமதமில்லாமல் பிரயாணிகளுக்கு பயணச் சீட்டுக்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களை உடனடியாக - கொழும்பு, காலி, கண்டி, சிலாபம் மற்றும் அவிசாவளை போன்ற பகுதிகளில் விரைவானமுறையில் அமுல்படுத்துமாறு - போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரயில்வேத் திணைக்கள அதிகாரசபையின் அதிகாரியான பி.கி. மனுதுங்க இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

இந்த மீள்கட்டுமானப் பணிகள் அடுத்தமாதம் முடிவில் அல்லது அடுத்தவருடப் பகுதியில் முடிவடையும் எனத் தெரிவித்தார்.

## மாணவர் அனுமதி அட்டையை வழங்குவதற்கு பரீட்சைத் திணைக்களம் இரவு - பகல் சேவை

(கொழும்பு)

அடுத்த மாதம் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில், இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்களின் நன்மைகருதி, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், இரவு - பகல் சேவையினை நடத்தி, அவர்களுக்கான அனுமதி அட்டையினை வழங்கவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள், ஏற்கனவே தபாலில் அனுப்பபட்டுவிட்டதெனவும். பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்நாட்டு அஞ்சல் விநியோகத்திலுள்ள குறைபாடு காரணமாக, அம்பாறை மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் சென்றடைவதில் தாமதம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம், எனத் தெரிவித்த அந்த அதிகாரி, அனுமதி அட்டை கிடைக்காதவர்களுக்கு, விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

இதன்படி, அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள்- வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, பதிவு செய்யப்பட்ட பரீட்சை விண்ணப்பத் தபால் இலக்கம் என்பனவற்றை - பரீட்சைத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தினால், ஐந்து நிமிடத்திற்குள் அனுமதி அட்டை வழங்கப்படுமென அவர் தெரிவித்தார்.

# சகல இனங்களினதும் பாதுகாப்புக்காக புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படுகிறது!

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

இந்த நாட்டின் சகல இனங்களினதும் பாதுகாப்பிற்கு - பிரான்சில் அமைந்துள்ளதுபோன்று புதியதொரு அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என, நீதி அரசியல் வீவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி நடந்த செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

பிரான்சில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின்படி, மறுக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளபோது, சட்டங்களை அமுல்படுத்துவதில் எதுவித பிரச்சினைகளும் எழுவதில்லை.

தற்போது நாட்டின் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான பிரச்சினைகளைச் சமரசமான முறையில் பேசித் தீர்க்கவுள்ளோம். மூன்று அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு - தீர்வு காணப்படாவிடின், சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்லமுடியாது.

மேலும், பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லும் அளவுக்குப் பிரச்சினையை வளர்க்காது, ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொளவதன்மூலம், தற்போதைய அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அரச அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர்

## அமைச்சின் உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம்

அரச அலுவலகங்களில் பணியாற்றும் அனைவரும் - மக்களுக்குச சேவை செய்வதற்காகவே அரசினால் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், ஒரு சிலரே தமக்கு ஒப்படைக்கபட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்து, மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுகிறார்கள் என - இந்து விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

உயரப்புலம் கிராம அலுவலர் பி.சிவபாதசுந்தரம் - தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையினையும், அந்தக் கிராமத்தில் 17 வருடங்கள் சேவையாற்றி, ஓய்வு பெற்றமையையும் பாராட்டி நடத்தப்பட்ட விழாவில உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - நான் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக இருந்தபோது, அவரது நற்பண்புகளையும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்ததையும் அவதானித்துப் பாராட்டியிருக்கிறேன். அவர் அரச அலுவலராகப் பதவிவகித்தாலும், கிராமத்தவர்களின் அபிவிருத்திக்கும், மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் முன்னின்று உழைத்தவர்

இந்த நிகழ்வில் தொடர்ந்து த.சிவபாதம் (புத்தொளி) உரையாற்றுகையில் - ஒரு கிராம அலுவலர் இந்தப் பதவியில் பதினேழு ஆண்டு காலம் சேவை ஆற்றி, ஓய்வுபெறுவது மக்களுக்கு கவலையளிப்பதொன்றாகும். இன்னும் பலவருடங்கள் சேவையாற்றக்கூடிய கிராம அலுவலர் - தனது சொந்தக் காரணத்துக்காக இளைப்பாறிச் செல்கின்றார். கிராம மக்களது துன்பதுயரங்கள், மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்குகொண்டு சேவையாற்றியதை, என்றும் மறக்கமுடியாது எனத் தெரிவித்தார். (44)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு சவுக்கு மரநடுகை

மாவீரர் தினத்தை முன்னிட்டு - வடமராட்சி கிழக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - தனது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில், சவுக்கு மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதிவரையான காலப்பகுதியில், சுமார் 2000 சவுக்கு மரங்கள் மாவீரர் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. வடமராட்சி வடக கிலுள்ள கடற்தொழில் சங்கங்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளன. (122)

# தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் வெடிபொருள் அகற்றும் பணிகள் பாதிப்பு

## மிதிவெடிச் செயற்பாட்டலுவலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைகாரணமாக - யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அகற்றம் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக, யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அந்த வட்டாரங்கள மேலும் தெரிவித்ததாவது -

இந்த மாதம் தொடர்ச்சியாக மழைபெய்து வருவதால், வெடிபொருட்களை அகற்றிவரும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இதனால், இந்தமாதம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு வெடிபொருட்களை அகற்றமுடியாததொரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனால், வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.மழைகாலம் முடிந்த பின்னரே இந்த வேலைகளைத் துரிதப்படுத்த முடியும்.

இதனால், ஜனவரி மாதம் முதல் புதியதொரு விரைவான வெடிபொருட்கள் அகற்றும் செயற்பாட்டுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவையுள்ளது.

இதற்காக மேலும் பல உறுப்பினர்கள் - வெடிபொருட்கள் அகற்றும் பணிக்காகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களும் விரைவில் கோரப்படவுள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ப)

# தாயார் மறுமணம்புரிந்த நபரால் 12 வயது சிறுமி பாலியல் வல்லுறவு

## மன்னார் பொலிஸில் முறைப்பாடு

தனது தாயார் மறுமணம் புரிந்த 40 வயது நபரால், பாலியல் வல்லுறவுக்கு உட்டுபடுத்தப்பட்டதாகத் தெரிவித்து, 12 வயது சிறுமி ஒருவர் - மன்னார் மாவட்ட பொலிஸில் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் சிறுமி தெரிவித்திருப்பதாவது -

தனது தந்தையார் இறந்த பின்னர், கடந்த வருடம் தனது தாயார் 40 வயதுடைய ஒருவரை மறுமணம் செய்ததாகவும், அந்த நபர் தினமும் தன்னைக் கொடுமைப்படுத்தி வந்ததாகவும்,

கடந்த 17 ஆம் திகதி தாய் வீட்டில் இல்லாத சமயம் வீட்டிற்கு வந்த அந்தநபர் - தன்னை வீட்டினுள் அழைத்து, தன்னுடன் உடலுறவு கொள்ளவருமாறுகூறி மிரட்டியதுடன், தன்னை அடித்துச் சித்திரவதை புரிந்த பின்னர் -

தன்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் அந்த முறைப்பாட்டில சிறுமி தெரிவித்துள்ளார். இதனையடுத்துச் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ள மன்னார் பொலிஸார், அவரைத் தடுப்புக்காவலில் வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (07)

# ஐஸ்கிறீம் கடையில் களேபரம்! சந்தேகநபர் பொலிஸாரால் கைது

நல்லூர் பகுதியில் ஐஸ்கிறீம் கடை ஒன்றின் உரிமையாளரால் - ஊழியர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகக் கடைக்கண்ணாடிகளைச் சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைப் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

நல்லூரிலுள்ள கிறீம் ஹவுஸ் ஒன்றின் உரிமையாளரினால் தொழிலாளிகள் இருவர் மோசமாகத் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட பொதுமக்கள், கடையின் கண்ணாடிகளை அடித்து நொருக்கிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய தாகக்கூறி, தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களில் ஒருவரான தேவராஜா பாஸ்கரனின் சகோதரனான - தேவராஜா சுதாகரன் என்பவரே கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இவரை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளககமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, கடைஉரிமையாளரை 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அதேவேளை, தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாஸ்கரனுக்கு - பொலிஸ்பாதுகாப்பு வழங்குமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரியாலையில் பச்சை மரங்கள் களவாக வெட்டப்படுகின்றன!

(யாழ்ப்பாணம்)


அரியாலை ஈச்சங்காடு, கொட்டுக் கிணற்றடிப் பகுதிகளிலிருந்து, களவாகப் பெருமளவு பச்சைமரங்கள் வெட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகால யுத்தம் காரணமாக இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இருப்பதால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பிற இடங்களில் உள்ள சிலர் - தம்மை அப்பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் என்று, இந்தப் பகுதிக்கு அருகில் உள்ள இராணுவ முகாமில் போலிப் பதிவுகளை மேற்கொண்டுவிட்டு, விறகுக்காகப் பெருமளவு பச்சைமரங்களை வெட்டியெடுத்துச் செல்கின்றனர் எனத் தெரியவருகின்றது. (55)


## வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்





முதலாவது அகவையில்



பெயர் : நி.விஜுஷா
முகவரி : இல.444/5, இராமநாதபுரம்.

இரண்டாவது அகவையில்



பெயர் : யோ.கிஷானி
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

மூன்றாவது அகவையில்



பெயர் : சு.சுபானு
முகவரி : சோதிமகால், நவிண்டில்.

நான்காவது அகவையில்



பெயர் : ம.சுதர்சன்
முகவரி : கே.கே.எஸ். றோட், மதவடி, வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

### பன்றிக்கேணி ஆலய விக்கிரகம் திருட்டு

(மீசாலை)

மீசாலை கிழக்கு - பன்றிக்கேணி சந்தசாமி கோவிலில், கடந்த வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் பிள்ளையார் விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

சம்பவ தினம் காலை - பு,சகர் பூசை செய்யும்போது, பிள்ளையார் விக்கிரகம் காணப்பட்டதாகவும். பின்னர் மாலையில் விக்கிரகத்தினைக் காணவில்லையெனவும். தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் விக்கிரங்களின் திருட்டு பரவலாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

### தலைமைத்துவ பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சிநெறியானது - எதிர்வரும் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று தினங்களிலும் காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் - கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சமுர்த்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் சமூக பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன், இவர்களுக்கான மதிய உணவு, போக்குவரத்துப் படிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (44)

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினுள் வெற்றிடமாகவுள்ள விவாகப் பதவிக்கு - யாழ்.மாவட்ட செயலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை - கிராம அலுவலர் பணிமனையில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 30 ஆம் திகதி எனத் தெரிவிக்கப்படுகிறது. (44)

### செல்வச்சந்நிதி சித்திரத்தேர் கால்கோள் விழா

சரித்திரப் புகழ்மிக்க தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கான புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான கால்கோள் விழா நேற்றுமுன்தினம், பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

கால்கோள் விழாவில் அமைச்சர் கரு ஜெயசூரிய, அமைச்சர் மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஆனந்தசங்கரி, ரவிராஜ, விநாயகமூர்த்தி, அரச அதிபர் செ.பத்மநாதன், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் நீலகண்டன் மற்றும் சமயப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இந்து கலாசார அமைச்சின் 65 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில், இந்தத் தேர் அமைக்கப்படவிருக்கிறது. இந்த ஆலயத்தின் மிகப் பெரிய சித்திரத்தேர் - 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இராணுவத் தினரால் தீயிட்டு எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அறநெறி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எட்டு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வும், கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு - நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில், இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையில் டிசம்பர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### நெறியாளர் குழுவுக்கான பயிற்சிப் பட்டறை

கூட்டுறவு அபிவிருத்தி திணைக களத்தின் கல்வி பயிற்சி விரிவாக்கத் திட்டத்தின்கீழ், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை, யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் டிசம்பர் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி செயலமர்வில் -

கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள், சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சங்கத்தின் நோக்கம், அதனைச் செயற்படுத்தும் விதம் ஆகியன தொடர்பாகக் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான செயற்பாடுகளைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி
யாழ்ப்



# சித்தமருத்துவ தகவல்கள்

## முருங்கையின் மருத்துவப் பயன்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இருபத்தைந்து கிராம் பாதாம்பருப்பை தண்ணீரில் ஊறவைத்து, மேல் தோலை அகற்றியபின், பருப்பின் மீது பால் தெளித்து, நெகிழ அரைத்துக்கொள்ளவேண்டும். முருங்கைக்காயிலிருந்து வழித்தெடுத்த சோற்றை, பாதாம் கலவையோடு கலந்து -காலை, மாலை இரண்டுவேளை சாப்பிட்டு வந்தால், எலும்புருக்கி நோய் குணமாகிவிடும்.

பால், நெய், தேன், குங்குமப்பூ இவற்றைச் சேர்த்து, மேற்கூறிய முறையில் இலேகியம் செய்து வைத்துக்கொண்டு, தினம் இருவேளை நெல்லிக்காயளவு உண்டு, கால்படி பசுவின் காய்ச்சிய பாலினை அருந்தவேண்டும். இதுவும் நல்ல பலனை அளிக்கும்.

தீராத காய்ச்சல் இருப்பவர்களுக்கு, காய்ந்து உலர்ந்து இருக்கின்ற பத்து முருங்கை விதைகளை எடுத்து, சிறிதுநேரம் தண்ணீரில் ஊறவைத்து, இத்துடன் மூன்று கரண்டி கடுகைச் சேர்த்து அரைத்து, முழங்கால் முழுவதும் பந்தம்போட்டு, சாம்பிராணிப் புகைகாட்ட காய்ச்சல் அதிசயிக்கத்தக்களவில் நின்றுவிடும்.

முருங்கைப்பட்டைக்கும் மருத்துவக் குணநலன்கள் உண்டு. முருங்கைப்பட்டையை இடித்துச் சாறெடுத்து, அதில் 100 மில்லிகிராம்வரை எடுத்துக்கொண்டு, நல்லெண்ணெய் காற்போத்தல் எடுத்து, இரண்டையும் சேர்த்து, மெல்லிய நெருப்பில் வைத்து காய்ச்சவும். தைலப்பதம் வந்ததும் எடுத்து வைத்தால் - மூட்டு வீக்கங்கள், வாயுப்பிடிப்புகள், இருப்பவர்கள் இதனை எடுத்து மேலே தேய்த்துத் தடவிவிட்டல், குணம் அடைவார்கள். இம்முறையை நோய் நீங்கும்வரையில் அனுசரிக்கலாம். முருங்கைப்பட்டையை மைபோல அரைத்து, பழுத்து உடையாத கட்டிகள் மீதும், வீக்கங்கள் மீதும் பூசினாலும் அல்லது வைத்துக் கட்டினாலும் நீங்கும்.

விஷம் தீண்டியவர்களுக்கும், விஷமருந்து அருந்தியவர்களுக்கும் -பட்டையின் சாற்றை வயது. பலம் முதலியவற்றை அனுசரித்து, ஒரு அவுன்ஸ் முதல், இரண்டு அவுன்ஸ் வரையில் உள்ளுக்கு அருந்தக் கொடுக்க, விஷமுறிவு நீங்கிவிடும்.

### முருங்கைப் பிசின்

முருங்கைப் பிசினின் மருத்துவ குணத்தைப்பார்ப்போம். முருங்கைப் பிசினை எடுத்து பாதாம்பருப்பு, முந்திரி, வெள்ளரிவிதை, பிஸ்தாப்பருப்பு, கசூரிக்காம் அல்லது பேரிச்சம்காய், தேத்தாங் கொட்டை, பூனைக்காலிவிதை, பரஸ்கிச்சக்கை, சிமை அசுவகத்தி, நிலப்பனை, மதனக்காமம், வாலுமுவையரிசி போன்றவற்றை எல்லாம் சேர்த்து, தாதுவிருத்தி இலேகியம் சாப்பிடலாம். இது மருத்துவர்கள் செய்யவேண்டிய ஒன்று.

நரம்புச்சோர்வு உடையவர்களுக்கு, அதிகாலை வெறும் வயிற்றில் காய்ச்சிய பசுவின் பாலில் ஒரு கரண்டி வீதம் முருங்கைப் பிசினைக் கலந்து சாப்பிட்டுக்கொண்டு வந்தால், நரம்புச்சோர்வு நீங்கும். இந்த பிசினைக் கால்பலம் எடுத்து, இரண்டு பலம் நல்லெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி வடித்து, காதினுள் இரண்டு துளிவிட்டு வந்தால், காதுவலி நீங்கும். காதிலுள்ள இதரபுண்கள் அகலும். பொதுவாக முருங்கையில் இரும்புச்சத்தும், தாமிரசத்தும், சுண்ணாம்புச்சத்தும் அடங்கி இருக்கிறது.

(முற்றும்)

கே.ரட்ணராஜா

# பயனுள்ள பொன்மொழிகள்

- ஒரு நல்ல தந்தை தன் குழந்தைகளுக்காகச் செய்யவேண்டிய முதல் கடமை அவர்களுடைய தாயை நேசிப்பதே.
  தியோடார். எம்.ஹெல்ப்ரு
- சிக்கலான குடும்பப் பிரச்சினைகளில் ஆணின் தர்க்கரீதியான முடிவைவிட பெண்ணின் உள்ளுணர்வே பெரும்பாலும் சரியாக இருக்கும்.
  ருட்யார்ட் கிப்ளிங்
- தீங்குகளை மணலில் எழுது. நன்மைகளைச் சலவைக்கல்லில் எழுது.
  பிரான்ஸ் பழமொழி
- யோசிப்பதானால் நிதானமாய் யோசியுங்கள். செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள். விட்டுக்கொடுப்பதனால் பெருந்தன்மையோடு விட்டுக்கொடு ங்கள்.
  கோல்டன்
- உன் வாழ்வை பிறர் வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்க்காவிட்டால் நீ மகிழ்ச்சியுடன் வாழ்வை அனுபவிப்பாய்.
  கென்ட்டார் செட்.
- மகிழ்ச்சி நம் தோட்டத்தில் விளையவேண்டும். மாற்றான் தோட்டத்தில் நமக்கு மகிழ்ச்சியைப் பறிக்க முடியாது.
  ஜெரால்டு
- முறிந்த கையைக் கொண்டு உழைக்காமல் ஒய்ந்த மனதைக் கொண்டு உழைக்க முடியாது.
- நூறுபேர் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால் ஓர் இல்லத்தை இல்லமாக்கப் பெண் வேண்டும்.
- சிரியுங்கள் – உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும்.
  அழுங்கள் — நீங்கள் ஒருவர்தான் தனித்து அழுது கொண்டிருப்பீர்கள்.
- எல்லாம் வேடிக்கைதான் நமக்கு நடக்காமல் மற்றவர்களுக்கு நடக்கும் வ ரை.
- துன்பப் பறைவைகள் உன் தலைக்கு மேலே வந்துவட்டமிடுவதை நீ தவிர்க்க முடியாது. ஆனால் அவை உன் கூந்தலிலே உட்கார்ந்து கூடு கட்டிக் கொள்ளாமல் தடுக்கமுடியும்.
  சீனப் பழமொழி
- கடலில் மூழ்கினால் முத்து எடுக்கலாம், கடனில் மூழ்கினால் சொத்து இழக்கலாம்.
- வாழ்ந்து கெட்ட மனிதனர் சிலர். பேசிக்கெட்ட மனிதரோ பலர். ஆகவே முதலில் காப்பாற்றப்படவேண்டியது நாக்கு.
- உங்கள் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதீர்கள். பணத்தை நம்பிக்கை யான இடத்தில் வையுங்கள்.
- சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தல்ல. அவன் அதை எவ்வளவு உபயோகமாகச் செலவு செய்கின்றான் என்பதில் தான் தங்கியுள்ளது.




(சென்றவாரத் தொடர்ச்சி...)

என்னில் பால் இல்லாத காரணத்தினால் குழந்தைக்கு பசுப்பால் கொடுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

மறுநாள் வைத்தியர் வந்து பசுப்பால் நேற்று மட்டும்தான் கொடுக்கலாம். இனி அதைத் தொடர்ந்து கொடுக்கக்கூடாது எனக் கூறிவிட்டார். தாய்ப்பால் இல்லாவிட்டால் குழந்தையை காப்பாற்ற முடியாது என்றும், குழந்தையைக் குடிக்க வைத்தால்தான் பால் சுரக்கும் எனவும் கூறியதால், குழந்தையைக் குடிக்கவைக்க முயற்சித்தோம் ஆனால், குழந்தைக்கு உறிஞ்சத் தெரிய வில்லை. கடைசியில் சரி, பசுப்பாலையே கொடுக்கலாம் என்று, அதைக் கொஞ்சம் கொடுத்தார்கள்.

மறுநாள் குழந்தை வீ என்று அழுதது. கால்கள் விறைத்துக்கொண்டது, மஞ்சள் நிறமாகச் சிறுநீர் போனதென்று, வைத்தியரிடம் சென்று கேட்டால்- அவரோ குழந்தையை இங்கு கொண்டுவாருங்கள் என்று கூறிவிட்டார். குழந்தையை எடுத்துக்கொண்டு சென்று காட்டினால், சிறுநீரில் தொற்று ஏற்பட்டுவிட்டது எனக் கூறினார்.

இவ்வாறாக எட்டு மாதத்தில் குழந்தை பிறந்தால், கண்டிப்பாக இரண்டு பேர் குழந்தையுடன் இருக்கவேண்டும். இரண்டுபேர் குழந்தையுடன் இல்லா மல், தாய் தூக்கக்கூடாது எனக் கூறினார்.

இப்படியாக நான் ஒரு பக்கம், குழந்தைவேறு ஒரு பக்கம் என்று பிரிந்து இருந்ததை நினைத்தால், எல்லாம் வேதனைதான். மறுநாள்தான் நான் குழந்தை இருந்த அறையில் போய்க் குழந்தையைப் பார்த்தேன், எனக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. குழந்தையின் வாய், மூக்குப் பகுதிகளில் நிறைய வயர்கள். ஒன்றும் புரியவில்லை. அழுது கொண்டே என் அம்மாவைப் பார்த்தால், இந்த அலைச்சலில் அவர் களைத்தவராகக் காணப்பட்டார்.

இப்போது எனக்குப் பால் சுரக்கத் தொடங்கியதால், அதன் வேதனையால் எனக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. வைத்தியரிடம் கேட்டபோது - பால் கொடுக்கக்கூடாது என்று கூறிவிட்டார். நினைத்துப் பாருங்கள் - குழந் தைக்குப் பால் தேவைப்பட்டபோது - பால் இல்லை. பால் இருக்கும்போது- குழந்தை குடிக்கும்நிலையில் இல்லை.

இப்படிப் பத்து நாட்களுக்குமேல் துன்பப்பட்டு, குழந்தையை என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்பொழுதுதான் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவு றுத்தல் அட்டையில், ஒரு குறைப்பிரசவக் குழந்தையை எப்படி வைத்து கொள்ளவேண்டும் என்றமுறை தெரிந்தது. சகோதரிகளுக்காக இதைத் தரு கின்றேன்.

அவர்கள் கூறிய கருத்து...

கண்டிப்பாகக் குழந்தை இரண்டு பேரின் கவனிப்பில் இருக்கவேண்டும்.' இரண்டு பேர் குழந்தையுடன் இல்லாமல் தூங்கக்கூடாது.

குழந்தை இருக்கும் அறையில் இரண்டு பேர்தவிர, கண்டிப்பாக வேறு யாரும் இருக்கக்கூடாது. மற்றும் குழந்தையை வைத்துக்கொண்டு சுற்றி நின்று பேசுவதுகூடாது. ஏனெனில், மற்றவர் மூச்சுக்காற்றுப் பட்டால், தொற்று ஏற்பட்டுவிடும்.

குழந்தை இருக்கின்ற அறை சுத்தமாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட இரண்டு பேரே குழந்தையைத் தூக்கவேண்டும். அவ்வாறு குறிப்பிட்டவர்கள் சோப்போட்டு கை, கால், முகம் கழுவிச் சுத்தம் செய்த பின்தான் - தூக்க வேண்டும். நான் அந்த அறைக்கு - பால் கொடுக்கவும், சிறுநீர் கழித்தால், துணியை மாற்றுவதற்கு மட்டுமே போவேன். எனது தாயார் மருந்து கொடுக்க என்று வருவார். மற்றப்படி, எங்கள் நேரடிக் கண்காணிப்பில் குழந்தை அந்த அறையில் இருக்கும்.

குழந்தைக்குக் கண்டிப்பாகக் கம்பளியினாலான சட்டை, தொப்பி, சொக்ஸ் போட்டு, நன்றாகப் பருத்தித்துணியால் சுற்றிப் போர்த்திவிடவேண்டும். குழந்தையின் மேல்படாமல், சற்றுத்தள்ளி 60 W மின்குமிழ் ஒன்றை ஒளிரவிட வேண்டும். அந்த அறை சாதாரண வெப்பத்தில் இருக்கவேண்டும். குழந் தையின் உடல் எக்காரணத்தைக்கொண்டும் குளிரக்கூடாது.

நன்றாகப் பால் குடித்திருந்தால், 3 மணிநேரம் கழித்தும், குறைவாகக் குடித்தால் 2 மணிநேரம் கழித்தும் தாய்ப்பால் கொடுக்கவேண்டும். குடித்தவுடன் தோளில் மெதுவாகச் சாய்த்து, 10 நிமிடம் கழித்துப் படுக்க வைக்கவேண்டும். குறைமாதக் குழந்தைக்கு புரை ஏறவேகூடாது. பிறகு காப்பாற்றுவது கடினம். அதனால், குழந்தை ஏப்பம்விட்ட பிறகு படுக்க வைக்கவும்.

தினமும் குழந்தையைச் சிறிது சுடுநீரில் (குழந்தை தாங்கும் அளவு) உடலை மெதுவாகத் துடைத்துவிடவேண்டும். குளிர்பட்டவுடன் குழந்தை ஜில்லிடும். அதனால், பார்த்து கவனமாகத் துடைக்கவேண்டும். பவுடர், கிறீம் போன்றவை போடக்கூடாது. குழந்தையின் நிறை 3 கிலோ வந்தவுடன், குளிக்கவைக்கலாம். ஆனால், 4 கிலோ வரும்வரை தலையில் தண்ணீர் படவேகூடாது.

குழந்தைக்குத் தடுப்பூசி போடமாட்டார்கள். அதனால், குழந்தையை கவனமாகத் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும். குழந்தையைத் தொட்டிலில் போடாமல், கட்டிலில் படுக்கவைத்து, நுளம்பு வலையைப் போடுவது நல்லது.

சிறுநீர் கழிக்கும்போது மாற்றம் இருக்கிறதா, சாதாரணமாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். குழந்தைக்குக் கொடுக்கப்படும் சொட்டு மருந் துகளை, வேளை தவறாமல் கொடுக்கவேண்டும்.

வீட்டிற்கு வந்த பிறகும், வாரம் தவறாமல் குழந்தையை வைத்தியரிடம் காட்டி, குழந்தையின் நிறையைக் கட்டாயம் அளக்கவேண்டும்.

# மீன்களை விற்பனை செய்வதைவிட கருவாடு செய்வதில் இலாபம் கிடைக்கிறது

**எழுவைதீவில் கடற்கரை ஓரத்திலே, தற்காலிகக் குடிசை அமைத்து, பெரியளவில் பரம்பரை பரம்பரையாகக் கருவாட்டு உற்பத்தித் தொழிலில் ஈடுபடு கின்ற திருமதி அல்போன்ஸ் - அன்ரனியுடனான நேர்காணல்.**

**நேர்காணல் - கிருபா**

மாலை மயங்கிக்கொண்டிருக்கின்ற வேளையில், நானும் என் நண்பரும் கால்நடையாக எழுவைதீவின் தென்புலத்திலிருந்து வடபுலம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

கடற்கரையின் ஓரத்திலே தற்காலிக குடிசை அமைத்துப் பெரியளவில் கருவாடு உற்பத்தி செய்யப்படுகின்ற வாடி - எங்கள் கண்களுக்குப் புலப்படுகின்றது. இருவரும் அந்தப் பக்கமாகச் சென்றோம்.

இருவர் பெரிய திருக்கைகளை வாளால் வெட்டி வெட்டி வழங்க, பெண் ஒருவர் அதனைச் சிறுசிறு கீலங்களாக்கிக் கடல்நீரில் கழுவிக்கொண்டிருக்கிறார்.

எங்களைக் கண்டவுடன் நீண்ட



நாள் அறிமுகத்தின் பயனாக, எல்லோருமாகச் சேர்ந்து இன்முகத்துடன் வரவேற்றார்கள்.

எழுவைதீவு இரண்டாம் வட்டாரத்தில் திருமதி அல்போன்ஸ் அன்ரனி - கடற்றொழில்மூலம் கிடைக்கும் மீன்களைக் கருவாடாக்கிச் சந்தைப்படுத்துபவர். இவருக்குப் பக்கதுணையாகக் கணவரும், உதவியாள் ஒருவரும் உள்ளனர். எனது கணவர் மாதகலில் பெற்றோருடன் இருந்த சிறுபராயம் முதல், இன்றுவரை தூண்டி வலையில் பிடிக்கும் மீன்களைக் கருவாடாக்கி, விற்பதை வாடிக்கையாகக் கொண்டவர். எழுவைதீவிலே வாடி அமைதது, பெரும் கருவாடு பதபபடுத்தும் ஒரேயொரு தொழிலாளராக - நாமே இருக்கின்றோம் என்றவர் - தான் கருவாட்டு உற்பத்தியைச் சுயதொழிலாகத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணத்தைப் பின்வருமாறு கூறினார்.

கருவாட்டு உற்பத்தியைச் சுய தொழிலாக நான் தேர்ந்தெடுத்தமைக்கு இரண்டு காரணங்கள் முதன்மையாக உள்ளன. அவற்றில் ஒன்று எனது கணவர் மாதகலில் பெற்றோருடன் இருந்த சிறுபராயம் முதல் கருவாட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளார். அவர் மூலம் எனக்குக் கிடைத்த அனுபவம்- நான் கருவாட்டு உற்பத்தியைச் சுயதொழிலாக மேற்கொள்வதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

அடுத்து எனது கணவர் கடற்தொழிலின்மூலம் பிடிக்கும் மீன்களை, அப்படியே விற்பதனைவிட, கருவாடாக்கி விற்றால் சரிக்குச்சரி இலாபம் கிடைக்கும் என்ற ஒரு நோக்கமும், நான் கருவாட்டினை உற்பத்தி செய்யக் காரணங்களாயின.

அத்துடன், நாங்கள் பரம்பரையாகக் கருவாட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வந்திருக்கின்றோம். அந்த நாட்டமும் என்னை இதில ஈடுபடுத்தியது என்று பெருமையாகக் கூறி முடித்தார்.

தொடர்ந்து கருவாட்டினைப் பதப்படுத்தும்முறை பற்றிக் கூறுவீர்களா? என வினவியதற்கு.

ஆம். எனது கணவரும், உதவியாளரும் அதிகாலை இரண்டு மணிக்குத் தூண்டிவலைக்குச் செனறு, மீன்களைப்பிடித்து கொண்டு நண்பகல் ஒரு மணியளவில் கரைசேருவார்கள். பின், நானும் அவர்களோடு இணைந்துகொள்வேன்.

முதலில் பிடித்த மீன்களை வகைப்படுத்துவோம். அவற்றிலே சுறா, பாரை, விளை, முரல், கட்டாப் பாரை போன்ற பெரிய மீன்கள் காணப்பட்டால், அவற்றை வெட்டிக் கழிவுகளை அகற்றி, கடல்நீரில் கழுவி, உப்பிட்டு அடுக்கிவைப் போம். மறுநாள் காலையிலிருந்து மூன்று நான்கு நாட்களுக்கு வெயிலில் காயவைப்போம்.

ஆனால், திருக்கை மீன் என்றால் இவ்வாறில்லை. திருக்கையை வெட்டி, சிறுசிறு கீலங்க ளாக ஆக்கிக்கொள்வோம். பின், அவற்றை கடல்நீரில் கழுவி, உப் பிட்டு, வக்குக்குள் கட்டிவைப்போம். மறுநாள் காலைமுதல் வெயிலில் மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள் வரை காயவைத்து சந்தைப்படுத்துவோம்.

சூடை மற்றும் சிறிய மீன்களாயின் - அதன் கழிவுகளை அகற்றி, கடல் நீரில் கழுவி, உப்பிட்டு பின் காயவைப்போம்.

கருவாடு பதப்படுத்துவது என்பது சரியான கஷ்டமான வேலை. கடலிலிருந்து வந்தவுடனேயே, மீன்களை உப்பிட்டு பதப்படுத்த வேண்டும். இல்லையேல், கருவாட்டின் பதம் கெட்டுவிடும். உப்பிடுகின்ற போதும் கூடுதலான அளவு உப்பு இடப்பட்டால், அதனாலும் கருவாட்டின் பதம் கெட்டுவிடும். அதற்கு ஏற்ப அதாவது, மீன்களின் தன்மைக்கு ஏற்ப உப்பிட்டுக் காய வைக்கவேண்டும் என்று விரிவாகக் கூறிமுடித்தார்.

மாரி காலத்தில் கருவாட்டினைப் பதப்படுத்துவதில் ஏற்படும் இடையூறுகள் தொடர்பாக கூறமுடியுமா, எனக்கேட்டபோது

ஆம், கோடைக்காலத்தில் தொழிலுக்குச் செல்வது முதல், கருவாடு பதப்படுத்திச் சந்தைப்படுத்துவது வரை எதுவித கஷ்டமும் இல்லை. ஆனால், மாரிகாலம் தொடங்கினால் கருவாட்டினைப் பதப்படுத்துவது சிரமமான காரியமாகவே அமையும்.

இக்காலத்தில் பதப்படுத்தி உப்பில்வைத்த மீன்களை - வெயிலில் காயவைக்கமுடியாத வகையில் தொடர்ச்சியாக மழைபெய்தால், மீண்டும் உப்பிட்டு, கடற்கரை மணலில் கிடங்குவெட்டி எட்டுநாள் முதல் பத்து நாட்கள்வரை கிடங்கிலே வைப்போம். சில சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் மழைபெய்தால், அதன் பதம் கெட்டுவிடும். பின் அவற்றை அவ்வாறே விடவேண்டியதுதான்.

கருவாடு கூடுதலான அளவில் பதம்கெட்டு, நாங்கள் நட்டம் அடைவதும் மழைகாலத்திலே தான்.

அடுத்து, எமது வாடி நிரந்தரக் கட்டடமாக இல்லாமையாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம். இரவுவேளையில் பெரும்மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில், உப்பிட்டு வைக்கப்பட்டுள்ள மீன்களில் - மழைநீர்பட்டால், அது தரம் கெட்டுவிடும். இதனால், இக்கருவாடுகளை இலகுவில் சந்தைப்படுத்த முடியாதென, மழைகாலத்தில் கருவாட்டினைப் பதப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிரமங்களை ஒவ்வொன்றாகக் கவலையுடன் கூறினார்.

தற்பொழுது, கருவாட்டிற்குள்ள சந்தை வாய்ப்புப்பற்றி விரிவாகக் கூறுங்களேன்...? எனக் கேட்டதற்கு -

கடந்த காலங்களில் கருவாட்டினைச் சந்தைப்படுத்துவதில் பெரும் பிரச்சினைகளுக்கும், பல்வேறு கெடுபிடிகளுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது. ஆனால், இன்று அவ்வாறில்லை. சுதந்திரமாகச் சந்தைப் படுத்தமுடிகிறது.

அத்துடன், கண்டி வீதி திறக்கப்பட்ட பின்பு, ஓரிரு வியாபாரிகள் நேரடியாகவே இங்குவந்து, கருவாட்டினைக் கொள்வனவு செய்கிறார்கள். இதனால், எமக்குக் கூடிய இலாபம் கிடைப்பதோடு, இலகுவில் சந்தைப்படுத்தவும் முடிகின்றது.

மேலும், போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதனால், தொடர்ந்து வியாபாரிகள் வருவதில்லை. இதனால், எனது கணவர் - யாழ்ப்பாணம் கொண்டுசென்றுதான் விற்பார். நாங்களே கொண்டுசென்று விற்பதாயின், வியாபரிகள் கேட்கும் விலைக்கே கொடுக்கவேண்டும். இல்லையேல் விற்கமுடியாது.

யாழ்ப்பாணம் கொண்டுசெல்லும் போது, ஒரு உரப்பை கருவாட் டிற்கு - படகுக்கூலி 30 ரூபா, வான் கூலி 40 ரூபா எடுப்பார்கள். இவற் றால் எமக்குக் கூடியலாபம் கிடை க்காதுவிடும்.

வியாபரிகள் எம்மிடம் ஒரு கிலோ திருக்கைக் கருவாடு - 30 ரூபாவிற்கும், விளைக்கருவாடு - 80 ரூபாவிற்கும், பாரைக் கருவாடு - 130 ரூபா விற்கும், கட்டாப்பாரைக் கருவாடு - 150 ரூபாவிற்கும் கொள்வனவு செயது, பின் இவற்றை முறையே 45 ரூபா, 120 ரூபா, 180 ரூபா, 280 ரூபாவிற்கு விற்பனை செய்வார்கள். இதனைப் பார்க்கும்போது, கவலையாகத்தான் இருக்குமெனக் கவலையுடன் கூறி னார்.

உங்கள் உற்பத்தியை மேலும் விருத்தியாக்குவதற்கு, நீங்கள் எதிர்பார்ப்பவை தொடர்பாகக் கூறமுடியுமா? என வினா வியதற்கு -

ஆம், கருவாட்டினைப் பதப்படுகின்ற, களஞ்சியப்படுத்துகின்ற தற்காலிகக் குடிசை வாடியை, நிரந்தரமான கட்டடமாகக் கட்டுவதற்கு, மீன்களைக் காயவைப்பதற்குரிய இடங்களை அமைப்பதற்கும் - உதவிகள் வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், சமூகமேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் கடற்தொழிலாளர் சமாசம் என்பன - கடனடிப்படையில் நிதியுதவி செய்தால், எங்களால் கட்டடம் அமைக்கமுடியும்.

முன்னைய காலங்களில் இந்த வாடியில் கருவாட்டினைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வேளையில், பலதடவைகள் - வாடி பரிக்கப்பட்டு, உள்ளே வைக்கப்பட்டிருந்த கருவாடுகள் முழுமையாகச் சூறையாடப்பட்டிருந்தன. இதனால், எங்களுக்குப்பல ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டது.



நிரந்தரக் கட்டடங்கள் அமைத்துத்தரப்பட்டால், அல்லது நிதியுதவி வழங்கப்பட்டால், எவ்வளவு கருவாட்டினையும் களஞ்சியப்படுத்தி வைககமுடியும். அத்துடன், திருட்டுக்களும் இடம் பெறச் சந்தர்ப்பம் கிடையாது.

மேலும் எமது வாடி அமைந்துளள இடம் - கடலலைகள் நேரடியாக மோதுகின்ற முனங்குப் பிரதேசமாக அமைந்துள்ளதால், எமது தொழிலைத் திறம்படச்செய்யமுடியாதுள்ளது, இங்கு முகத்துவாரம் அமைக்கப்பட்டால், தொழிலைத் திறம்படச்செய்ய முடியும்.

நாங்கள் கடற்தொழிலில் ஈடுபட்டு, தொழிலில் கிடைக்கும் மீன்களை - கருவாடு ஆக்குவதானால், கடற்தொழிலுக்குரிய உபகரணங்களை மானிய அடிப்படையில் சமாசம் வழங்கினால், தொழிலைத் திறம்படச் செய்து, கூடிய இலாபம் பெறமுடியும் என வும் தன் விருப்பங்களையும், எதிர்பார்ப்புக்களையும் ஒவ்வொன்றாகக் கூறினார்.

எனது செவ்வியை நிறைவு செய்யும் பொருட்டு - நிறைவாகக் கூறிக்கொள்ள விரும்புவது யாது? எனக் கேட்டதற்கு -

சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகி, கண்டி வீதி திறக்கப் பட்ட பின்னர் - இங்கிருந்து மீன்கள் உடனுக்குடன் தென்னிலங்கைக்கு ஏற்றுமதியாகின்றது. அதனைப்போல இங்கு உற்பத்தியாகும் கருவாட்டினையும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது, நாங்கள் எமது தொழிலைத் திறம்படச் செய்யமுடியும். இதன்மூலம் கூடிய இலாபம் கிடைக்கும்.


இங்குள்ள கருவாட்டிற்குத் தென்னிலங்கைப் பிரதேசத்தில் கூடிய சந்தைவாய்ப்பு இருப்பதாக அறிகின்றோம். எனவே, இங்கிருந்து கருவாட்டினை ஏற்றுமதி செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறோம். எமது சிறு கைத்தொழில மூலம் - எமது வாழ்வு பிரகாசிக்கும், அத்துடன், எம்மைச் சூழ்ந்துள்ள வறுமை நீங்கி, தன்னிறைவோடு வாழமுடியும் என்று - தன் ஆதங்கங்களை எடுத்துக் கூறினார்.

திருப்திகரமான ஒரு செவ்வியைப்பெற்ற மனநிறைவோடு, அவரிடமிருந்தும், அவரது கணவரிடமிருந்தும் விடைபெற்று, எழுவைதீவின் வடபுலம் நோக்கி எமது பயணத்தைத் தொடர்ந்தோம். ✸

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை பாதுகாப்பு

குழந்தை நிலத்தில் சின்னச்சின்ன பொருட்கள் இருந்தால், அதைப்பாய்ந்து சென்று எடுத்துவிடும். அதை வாயிலோ, மூக்கிலோ போட்டுக்கொண்டால், அது யாருக்குத் துன்பம்.

சிப் வைத்துத் தைத்த உடைகளைக் கூடியளவு குழந்தைக்குப் போடுவதைத் தவிர்க்கவேண்டும். இல்லையென்றால், மறக்காமல் குழந்தைக்கு உள்ளாடை அணிவித்த பிறகு, உடைகளை அணிவிக்கவேண டும்.



சமையறைக்குள் கூடியவரை குழந்தைச் செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இடுப்பில் குழந்தையைத் தூக்கிக்கொண்டே கொதிக்கும் உணவுகளை இறக்க முயற்சிக்காதீர்கள். அப்படி இறக்கும்போது, குழந்தை சற்றே திமிறினால், கொதிக்கும் உணவு குழந்தையின் காலில் பட்டுவிடக்கூடும்.

ஒரு வயதுவரை நிலத்தில் உள்ளபொருள்களைக் கையாளும் குழந்தை - அதற்குப் பிறகு எதையாவது பிடித்துக்கொண்டு நிற்க வேண்டும், நடக்கவேண்டும் என முயற்சிக்கிறது. கதிரையைப் பிடித்துக்கொண்டு நிற்பது, சாப்பிட்டு மேசையிலுள்ள துணியை இழுப்பது போன்ற முயற்சிகளையெல்லாம் செய்யும் காலகட்டம் இது என்பதால், அதிக கவனத்துடனும், விழிப்புணர்வோடும் இருக்க வேண்டியிருக்கும்.

இரண்டு வயதில் கதிரையின் மீது ஏறுவது மட்டுல்ல, பிற சாகசங்களையும் செய்து பார்க்க முயற்சிக்கின்றது. எம்மைப்போலவே காஸ் லைட்டரை அழுத்திப்பார்க்க ஆசைப்படுகிறது. இதனால் சிகரெட் லைட்டர், காஸ் லைட்டர் ஆகியவற்றையெல்லாம் குழந்தைக்கு எட்டாத இடங்களில் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

வாசனைத்திரவியமான சென்ட், சவ்ரம் செய்யும் கருவி போன்றவற்றைக் குழந்தைக்கு எட்டும் இடங்களில் வைக்கவேண்டாம். அப்பா செய்துகொள்வதைப் பார்க்கும் குழந்தைக்கு, தானும் அவற்றை செய்து பார்க்க ஆர்வம் பொங்கும். முக்கியமாகச் சவரம் செய்யும் பிளேட்டுக்கள் மற்றும் வெட்டும் பொருட்களை மறந்தும்கூட, குழந்தைக்கு எட்டும் இடத்தில் வைத்துவிடவேண்டாம். சூடான எந்தப் பொருளையும் சாப்பாட்டு மேசையில் எட்டக்கூடிய அளவில் வைக்கவேண்டாம். மேசை மீது விரிக்கப்படும் விரிப்பை -மேசையின் விளிம்புடன் அளவாக வெட்டிவிடவேண்டும். மேசையின் விளிம்பைத் தாண்டிக் கீழே தொங்க விடவேண்டாம். ஜன்னல்கள், கதவுகள் போன்றவற்றின் வழியாகக் குழந்தை கீழே விழுந்துவிடும் வாய்ப்பு உண்டு. அதற்குப் போதிய தடுப்புக்கம்பிகளை உடனடியாக வைத்துவிடுங்கள். கதவை மூடும்போது குழந்தை கையை வைத்துக்கொள்வது வழமை. கவனம்தேவை. குழந்தைக்கு எட்டாத இடத்தில்தான் மண்ணெண்ணை, மருந்துப்பொருட்கள் போன்றவற்றை வைக்கவேண்டும். முக்கியமாக ஒன்றரையிலிருந்து இரண டரை வயதுக் குழந்தை உள்ளவர்கள் -வீட்டில் இந்த விடயத்தில் மிகவும் முன்னெச்சரிக்கை தேவை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி
-திருக்குறள்.

## நமது நோக்கு

# நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒரு வரவு செலவுத் திட்டம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பல்வேறு சிக்கல்களுக்கு இடையே, தனது மூன்றாவது வரவு - செலவுத்திட்டத்தை ஒரு மாதிரியாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இந்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பான அபிப்பிராயங்கள், கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் கண்டனங்கள் யாவும் அடுத்து வரும் நாட்களில் வெளிவரும் என்பது உண்மைதான்.

இம்முறை வரவு - செலவுத்திட்டத்தை வெளியிட்டு உரையாற்றிய சிறிலங்காவின் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி குறிப்பிட்ட ஒரு முக்கிய விடயத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

'இரு தசாப்த கால யுத்தத்தின் பின்னர் அரசாங்கமானது, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டமையும், போர்நிறுத்தம் உறுதியாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டமையுமே பொருளாதாரத்தின் புத்தெழுச்சிக்கு குறிப்பிடத்தக்களவு பங்களித்தன. இச்சமாதான செயற்பாட்டின் முன்னெடுப்பினை தற்போது மேற்கொள்ள முடியாமலிருப்பது, இன்னொரு எதிர்மறைக் காரணியாக உள்ளது. என, அவர் தனது உரையின் போது குறிப்பிட்டமையானது, இன்றைய சிறிலங்காவில் அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் யதார்த்த நிலைமையினை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

பொ.ஐ.முன்னணி சந்திரிகாவின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை முழுமையாக 1990களின் மத்தியில் ஏற்றுக் கொண்டது, முதல் ரணில் தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பொறுப்பேற்றது வரையிலான காலப்பகுதி வரை, சிறிலங்கா அரசு யுத்தகால வரவு செலவுத்திட்டங்களையே முன்வைத்ததுடன், அபிவிருத்திக்கென சர்வதேச நாடுகளில் இருந்து பெற்றிருந்த நிதிவளங்களையும் கூட, வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கெதிரான நியாய மற்றதும், மூர்க்கத்தனமானதுமான, யுத்தத்திற்கே செலவழித்ததன் மூலம் பொருளாதாரரீதியிலும், வளர்ச்சிரீதியிலும், பாரிய வீழ்ச்சியையும் காணவைத்ததுடன், திறைசேரியை வெற்றிடமாக்கிய பெருமையையும் தட்டிக் கொண்டது.

சந்திரிகா தலைமையிலான அரசு தேசிய பாதுகாப்பு என்ற பெயரிலும், சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரிலும் தேசிய வளமனைத்தையும் வீணாக்கியதுடன், நாட்டின் வருமான வளங்களனைத்தையும் நாசமாக்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டின் பொருளாதார மற்றும் உற்பத்திவள வீழ்ச்சியின் எதிரொலியே சந்திரிகாவின் வீழ்ச்சியாகவும், ரணிலின் எழுச்சியாகவும் ஒரு தற்காலிக மாற்றம் ஏற்பட வழிவகுத்தது.

சந்திரிகாவின் வீழ்ச்சி, போரில் அவரது தலைமையிலான அரசும், அவரது மாமனார் அனுருத்த ரத்வத்தையாகிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் நெறிப்படுத்தலின் கீழ் போரைத் தொடர்ந்த படையினரும், சந்தித்த மோசமான பின்னடைவுகளாலும், வரலாற்றுத் தோல்விகளாலும் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகவும் அமைந்தது. அந்தக் காலங்களில் பாதுகாப்பு அமைச்சுடன் நிதியமைச்சையும் தன்வசம் வைத்திருந்தவர் சந்திரிகாவே ஆவார்.

அப்போது சந்திரிகாவின் சார்பில் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து, அந்த போர்க்கால வரவு - செலவுத் திட்டத்திற்கு நியாயம் கற்பித்தவர். இப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான பிரசாரப் பிரசங்கியரான அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்களே.

இதனைத்தான் வரலாற்று கோமாளித்தனம் என்பது. எதுவானாலும் இன்றைய சொக்ஸி அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டம் சமாதான காலத்தில் சமாதானத்தின் மேலான உத்தரவாதத்தின் பேரில் சர்வதேச உதவிவழங்கும் - கடன்வழங்கும் - நாடுகள் வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ள நிதியுதவிகளை நம்பி மட்டுமே உருவாக்கப்பட்டு, முன்வைக்கப்பட்ட ஒன்றாகும்.

இந்த வரவு - செலவுத்திட்டம், படையினருக்கும், அரச ஊழியருக்கும் சம்பள உயர்வு, ஓய்வூதியர்களுக்குச் சலுகைகள், வீடமைப்புக் கடன் உட்பட பல்வேறு விடயங்களை பரபரப்பாக முன்வைத்துள்ளபோதிலும், சாதாரண பாமர ஜனங்களின், அன்றாடம் காய்ச்சிகளின் எதிர்காலம் குறித்த எந்த ஒரு நம்பிக்கைதரும் அம்சங்களையும் கொண்டிருக்கிவில்லை என்பதை குறிப்பிடுவது அவசியமாகும்.

இம்முறையும் - இந்த சமாதானம் - போர்நிறுத்த காலத்திலும் கூட பாதுகாப்பு செலவினத்துக்கு 5802 கோடியே 22 லட்சம் ரூபாய்களை ஒதுக்கியுள்ளமையானது அரசின் சமாதான செயற்பாடுகள் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இந்த ஒதுக்கீடு கடந்த ஆண்டுகளையும் விட அதிகமாகும். பாதுகாப்பு படையைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தப்பியோடியுள்ள நிலையில் இந்தளவு நிதி ஒதுக்கீடு என்பது அனாவசியமானதாகும். இது இராணுவத்தை மேலும் நவீனமயப்படுத்தவும், பலப்படுத்தவுமே பயன்படுத்தப்படும் என்பதுமே உறுதி.


இதேவேளை, போரினால் முற்றாக பல்வேறு வகையிலும் சிதைவடைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பிற்கும், அப்பகுதி வாழ் மக்களின் புனர்வாழ்விற்கும், என, வெறும் 800 கோடி ரூபாய்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

இந்த நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் சமாதானத்தின் பேரால், புலிகள் மேற்கொண்ட போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பேரால், சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச நாடுகள் வழங்குவதாக உறுதியளித்துள்ள நிதியுதவிகளைக் கொண்டே மேற்கொள்ளப்படவுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

இன்று வெளிநாட்டு முதலீடுகள், தனியார்துறையினரின் வளர்ச்சி, சுற்றுலாத்துறையினரின் முன்னேற்றம், கடன்வழங்கும் நாடுகளின் உதவி அதிகரிப்பு ஆகியன அனைத்துமே சமாதானம், என்ற ஒரு சொல்லின் மீதான நம்பிக்கையிலேயே சிறிலங்காவில் ஓரளவு உறுதியான முன்னேற்றத்தை காணத்தொடங்கியுள்ளது என்பதை சிறிலங்காவின் அதிகாரபீடங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இன்றைய இந்த சமாதான நிலைமை ஏற்பட்டிருக்காவிடின் இந்த வரவு - செலவுத் திட்டமே முன்வைக்க முடியாத நிலையில் மக்கள் மீதான வரிச்சுமைகளை விதிக்கும் திட்டம் ஒன்றே சமர்ப்பிக்கப்பட நேர்ந்திருக்கும் என்பதையும், இன்று சமாதானத்தை தகர்க்க நினைப்போர் புரிந்துகொள்ள வேண்டும்.

## நாடும் நடப்பும்




செய்தி: இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கான தருணம் வந்துவிட்டது. (எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ)

### இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில்

# முஸ்லிம்களுக்காக முன்வைக்கப்படும் தீர்வை ஐ.தே.முன்னணி அரசு வெளிப்படுத்தவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். ஹரீஸ் கோரிக்கை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் மூன்றாம் தரப்பாகிய முஸ்லிம்களுக்காக முன்வைக்கும் தீர்வு என்னவென்பதை துல்லியமாக வெளிப்படுத்தும் தீர்வுத் திட்டவரைபை உடனடியாக முன்வைக்க வேண்டும்!

தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளையும், முஸ்லிம்களின் உணர்வலைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக மெற்றோ நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட விசேட குழுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மெற்றோ நிறுவனத்தின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில், நிந்தவூர் அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை அஷ்ரப் மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மெற்றோ நிறுவனத்தின் பிரதேச அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி கோரிக்கைத் தீர்மானம் தொடர்பில் மொற்றோ நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முஸ்லிம்கள் மீது எழுதப்பட்ட அடிமைச் சாசனமாகும்.

இந்த உடன்படிக்கையை அடித்தளமாகக் கொண்டு நடைபெற்ற பலசுற்று சமாதானப் பேச்சுவார்த்தையின் முக்கிய கட்டமாக அரசாலும், விடுதலைப்புலிகளாலும் தத்தமது நகல் திட்டவரைபுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை 17 ஆம் திகதி அரசு முன்வைத்த தற்காலிக நிர்வாகக் கவுன்ஸில் எனும் பெயரிலான வரைபில், முஸ்லிம்கள் தொடர்பாக பிரத்தியேகமாக எதுவும் குறிப்பிடாமல் முற்றுமுழுதாகப் புலிகள் இயக்கத்தை மையப்படுத்தியே அமைகின்றது.

புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்பட்ட வடக்கு-கிழக்கிற்கான தன்னாட்சி அதிகாரசபை என்னும் பெயரிலான வரைபிலும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் புறந்தள்ளப்பட்டுள்ளன.

இருதிட்டவரைபுகளிலும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் புறந்தள்ளப்பட்டுள்ளன.

இரு திட்ட வரைபுகளும் முன்வைக்கப்பட்டுள்ளவேளை, துரதிஷ்டவசமாக ஜனாதிபதி மாற்று அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், நோர்வே அனுசரணையாளர்களும் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதாக அறிவிப்புச் செய்துள்ளனர்.

எனினும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமானால், அது வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைப்பது தொடர்பாக மேற்படி அரசு, புலிகள் இருவரைவினதும் இணக்கப்பாடுகள் தொடர்பாகவே நிச்சயம் அது அமையும்.

அரசினதும், புலிகள் இயக்கத்தினதும் முஸ்லிம்கள் தொடர்பான அரசியல் நம்பகத்தன்மைகள் நாளுக்குநாள் பூச்சியத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

எனவே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அதில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்வதானால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முதற்கட்டமாக முஸ்லிம் களுக்கான தீர்வு தொடாபாக நகல் திட்டவரைபை முன்வைக்க வேண்டும்.

இதனடிப்படையிலேயே, ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நம்பகத்தன்மை ஊர்ஜிதப்படுத்தப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

# டிப்ளோமா பரீட்சைகள் 27, 28 ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (பழைய பாடத்திட்டம்) பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் யாவும் வந்துசேர்ந்துள்ளதால் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் அலுவலக நேரங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் த.இராஜரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ப)

# மாவீரர் தின பதாதைகள் கட்டுவதற்கு படைப்பிரிவின் அனுமதி பெறவேண்டும்

## 512 ஆவது படைப்பிரிவினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதிகளில் மாவீரர்தின பதாதைகளை கட்டுவதாக இருந்தால், 512 ஆவது படைப்பிரிவின் அனுமதியைப் பெறவேண்டுமென, இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள நடைபாதையோர வியாபாரிகளால், மாவீரர் தின நினைவுப்பதாகை ஒன்று யாழ்.பிரதான வீதியில் கட்டப்பட்டுக் கொண்டிருந்தவேளை, அவ்விடத்திற்கு வந்த படையினர் வியாபாரிகளை எச்சரித்ததோடு, பதாதைகளை கட்ட வேண்டாம் எனத் தடுத்துள்ளனர்.

இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த வியாபாரிகளுக்கும், படையினருக்கும் இடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதன்போது வியாபாரிகள் நாம் பதாகை கட்டுவதை தடுக்கிறீர்கள் இது எமது நடைபாதை வியாபாரிகளுக்குரிய கடமை. நகரின் ஏனைய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள பதாதைகளை தாங்கள் கவனிக்கவில்லையா? “சிங்களவர் எமது தேசத்தில் வெசாக் கொண்டாட்டத்திற்கு பதாகைகள் கட்ட முடியுமெனில், நாம் ஏன் மாவீரர்நாளுக்கு கட்ட முடியாது” என கேள்வி எழுப்பினர்.

இதனால், ஆத்திரமுற்ற படையினர் பதாதைகள் கட்டப்பட்டால் அவற்றை அறுத்தெறிவோம் என எச்சரித்ததுடன், பதாகை கட்டும் நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகள் தண்டனைக்குள்ளாவார்கள் எனவும், எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக வியாபாரிகள் நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனுக்கு தெரிவித்தனர்.

# இந்த வார பலன்கள்

## 21.11.2003 ~ 27.11.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 21 மா. 5.31 துல-சந்<br>22 கா. 9.24 தனு-சுக்<br>23 மா. 5-27 விரு-சந்<br>25 மா. 4.48 தனு-சந்<br>27 மா. 5-34 மக-சந் | | |
| நெப் | | | குரு |
| | சூ, புத, சுக் | கேது | சந் |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல சிறப்பான பலன்கள் காத்திருக்கின்றன. எல்லாவகையிலும் முன்னேற்றம் காணப்படும். எதிர்பாராத வருவாய்களும் வந்துசேரும். கணவன் -மனைவியிடையே அந்நியோன்யம் கூடுதலாக இருக்கும். பிள்ளைகள் பண உதவி புரிவார்கள். வாகனம் வைத்திருப்போர் புதுவாகனத்தைப் பெற முயற்சப்பார்கள். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும். வங்கி நிலைகள் சிறப்பாக இருக்கும். வியாபாரம் செய்வோர் பெருத்த இலாபத்தைப் பெறுவார்கள். புதிதாக முதலீடுகளைச் செய்ய முடியும். விவசாயத் துறையிலுள்ளோர் தமது பொருட்களைச் சந்தைப்படுத்தி, அதிக இலாபம் பெறுவர். உத்தியோகத்தர்களும் திறமையுடன் செயற்படுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பு, பாராட்டுக்கள் கிட்டும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியினர் இவ்வாரம் நன்மை, தீமை கலந்த பலன்களையே காண்பர். தொழில் முயற்சிகள் வெகு பிரயாசத்தின் மேல் பலன்தரும். தொடங்குங் கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். தேகசுகம், குடும்பசுகம் இடையிடையே பாதிப்படையலாம். பிற நாட்டிலிருந்து கிடைக்கும் உதவி காலந்தாழ்த்தியே வரும். அயலவர்களிடையே மனக்கசப்பு ஏற்படும். ஆயினும், எதனையும் சமாளிக்கக்கூடிய தன்மை காணப்படும். பிரயாணங்களை எதிர்நோக்குவோர்- காலதாமதத்தை அடைவர்.

தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமானாலும், தமது சாமர்த்தியத்தால் அவற்றை நிறைவேற்றி நற்பெயர் எடுப்பர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனவு நடைபெற்றாலும், பணம் குறைவாகவே கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்து நற்பலன் காண்பர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுனராசியினர் தொழிலை எவ்வளவு தறமையுடன் செய்தாலும், வருவாய் குறைவாகவே இருக்கும். செலவுகள் வரவை. மிஞ்சிப்போகும். வைத்தியச் செலவுகளும் கூடுதலாக இடம்பெறும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் காணும். பிள்ளைகளின் உதவி கிடையாது. கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. பிரயாணங்களின்போது பொருள் நஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. இரகசிய பகைவர்கள் பற்றிக் கவனமாக நடக்கவும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு இழுபறிநிலை தொடரும். உத்தியோகத்தர் சிலருக்கு திடீர் இடமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் ஓரளவு விற்பனையானாலும், புதிய முதலீடுகளுக்கு பணம் தேவைப்படும். மாணவர்களுக்கு ஊக்கமும், விடாமுயற்சியும் தேவை.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்குத் தொழில்துறையில் முன்னேற்றம் உண்டாகும். வருவாய் அதிகரிக்கும். புதிதாக தொழில்களில் ஈடுபட வாய்ப்புக்கள் ஏற்படலாகும். குடும்ப உறவுகள் சுமுகமாக அமையும். அடிக்கடி பிரயாணங்களில் ஈடுபடுவார்கள். தனித்தொழில் செய்வோர் நல்ல இலாபம் காண்பர். தொழிலாளிகளின் ஒத்துழைப்பினால் நன்மையடைவர். தூர தேசப் பிரயாணங்கள் கைகூடும். திருமணத்தை எதிர்நோக்குவோரும் நற்பலனடைவர். உத்தியோகத்துறையிலுள்ளோர் சிறப்பாகச் செயலாற்றி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்குச் சிரமம் கூடுதலாக இருப்பினும், நல்ல இலாபமடைவர். புதிய முதலீடுகளையும் செய்ய நன்று. மாணவர்கள் தமது ஊக்கத்தினால் பரீட்சைகளில் கூடிய புள்ளிபெறுவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியினருக்கு இவ்வாரம் கலகலப்பாக இருக்கும். பொருளாதாரம் மேம்பாடடையும். இனபந்துகளின் உறவுகள் மகிழ்ச்சியைத்தரும். வீட்டில் சுப கருமங்கள் நடைபெறும். நண்பர்களால் உதவிகிட்டும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சனை இருக்காது. எதிர்பாராத வருவாய்கள் வந்துசேரும். கணவன் - மனைவி அந்நியோன்யம் சிறப்படையும். புதிதாகப் பொருள் பண்டங்களையும், உடுப்புக்களையும் வாங்கிச் சேர்ப்பார்கள். உத்தியோகத்தில் ஈடுபட்டுள்ளோர் பொதுமக்களின் பாராட்டுக்களைப் பெறுவர். விவசாயத்துறையினர் நிகர இலாபமடைவர். ஆடம்பரப் பொருள் விற்பனை செய்வோர் கூடிய பணவருவாயைப் பெறவாய்ப்புண்டு. மாணவர்கள் சித்தியும், பாராட்டுக்களும் பெறுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலனுக்குரிய வாரமாக அமைகிறது. தொழில் முயற்சியில் பிரயாசைக் கேற்ப இலாபமுண்டு. எனினும், வருவாயில் திருப்திகாண முடியாது. திடீர் சுகக்குறைவு ஏற்பட இடமுண்டு. அயலவர்களாலும், நண்பர்களாலும் உதவிகிட்டும். சிலருக்கு வதிவிட மாற்றம் ஏற்படலாம். பிரயாணங்களின்போது பொருள் இழப்பு மனக் கவலையைத் தரும். எப்படியிருப்பினும், செலவுகள் வருவாய்க்கு மிஞ்சியே இருக்கும். திருமண விடயங்கள் இழுபறி நிலையிலேயே செல்லும். தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் தத்தளிப்பர். வியாபாரிகள் கறுப்புச் சந்தை வியாபாரத்தால் அதிக இலாபமடைவர். உத்தியோகத்தர்களுக்கு திடீர் மாற்றங்கள் காட்டுகிறது. மாணவர்கள் கல்வியில் கூடியகவனம் செலுத்தவேண்டும்.

### துலாம்

*(சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியினருக்கு நற்பலன்கள் குறைவாகவே காணப்படுகிறது. எவ்வளவு முயன்று தொழில் செய்தாலும், வருவாய் மட்டாகவே கிடைக்கும். மன விரக்தியும், நிம்மதிக் குறைவும் தலைதூக்கும். குடும்பசுகம் இடையிடையே பாதிப்படையலாம். வைத்தியச் செலவுகளும் கூடும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தவிர்க்கமுடியாமலிருக்கும். தொழிலாளர்கள் மிகவும் பிரயாசையடைய நேரிடும். உத்தியோகத்தினருக்கும் வேலைப்பழு அதிகமாகும். வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். இதனால், வங்கிநிலையைச் சமாளிக்க முடியாமலிருப்பர். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே காணப்படுகிறது.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

இவர்கள் கூடிய பங்கு நற்பலன்களையே இவ்வாரம் காண்பர். தொழில்கள் நல்ல வருவாயைத் தரும். வீடு, காணி சேருவதற்குரிய பலன்கள் தென்படுகின்றன. தேகசுகம், குடும்பசுகம் நன்றாக அமையும். புதிய தொழில்களைத் தேடுவோர் நற்பலன்களைக் காண்பர். தூரதேசத்திலிந்து மகிழ்ச்சியான நற்செய்தி கிட்டும். இனபந்துக்களின் வரவால் வீடு குதூகலம் அடையும். பிள்ளைகள் நன்கு உதவுவார்கள். இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோர், கருமம் கைகூடிச் சந்தோசமடைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு வசதியான தொழில் மாற்றங்கள் கிட்டும். வியாபாரம் கூடிய இலாபத்தைத் தரும் மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுராசியை குருவும், சனியும் நோக்குவதால், சில கருமங்களில் நற்பலனும், சில கருமங்களில் கஷ்ர பலன்களும் நடக்கும். தொழில் முயற்சி வருவாய் முதலியன நன்றாக இருக்கும். அலைச்சல் பிரயாசை கூடும். வீண் செலவுகள் வந்துசேரும் பெரியவர்கள், நண்பர்கள் உதவி செய்வார்கள். புதுத் தொழில், திருமணம் என்பன கைகூடுவதில் தாமதம் ஏற்படும்.

தூரதேசப் பிரயாணங்களும் நன்மை தராது. சில ஏமாற்றுப் பேர்வழிகளிடம் அகப்பட்டு தத்தளிக்க நேரிடும். உத்தியோகத்தினருக்கு வருவாய்களும், முற்பணங்களும் கிட்டும். வியாபாரம் சம்பந்தமாக பிரயாணத்தை மேற்கொள்ளவேண்டிவரும். நண்பர்களின் உதவி உண்டு. மாணவர்களுக்கு கல்வி சம்பந்தமாக பிரயாணங்கள் ஏற்படும். பரீட்சையில் சித்தியுண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு தொழில் சிறப்படையும். நல்ல வருமானம் கிட்டும். நீண்ட நாட்களாகக் காத்திருந்த பொருட்கள் வந்து சேரும். இனஜனபந்துக்கள் வருகை தருவார்கள். குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றும். ஆயினும் பெரிதாகாமல் சமாளிக்கப்பட்டு விடும். வீடுகள், கட்டிக்கொள்ள விரும்புவோருக்கு அனுகூலம் கிட்டும். தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவி கிடைக்கும். காணி சம்பந்தமாகவும் சச்சரவுகள் தோன்ற இடமுண்டு. உத்தியோகத்தவர்கள் சிறப்பாகக் கருமமாற்றி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வியாரிபாரிகளுக்கு முன்பு தேங்கிக்கிடந்த முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். மாணவர்கள் சோம்பல் தன்மையால், சித்தியை இழப்பர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

கும்பராசிக்காரர்களுக்கு பல வழிகளிலும் கஷ்டபலனைத் தரும் வாரமாக அமைகிறது. தொழில்களில் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் இலாபம் கிடையாது. செலவினங்கள் கட்டுக்கடங்காமல்போகும். தொடங்கும் கருமங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். தேக ஆரோக்கியம், குடும்பசுகம் அடிக்கடி பாதிப்படையும். வாகன ஓட்டுநர்கள் விபத்துக்கள் பற்றி அவதானமாக நடக்கவும். ஏமாற்றுப் பேர்வழிகளிடமும் அகப்படவேண்டி ஏற்படலாம். திருமண விடயம் கைகூடாது. உத்தியோகத்தர்கள் தமது கருமங்களைச் செவ்வனே செய்வதில் கஷ்ரமுறுவர். வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாமல் கஷ்ரமடைவர்.

### மீனம்


*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

இவர்கள் தொழில் முயற்சிகளில் படிப்படியாக முன்னேறுவர். செலவுக்கேற்ற வருவாய் கிடைக்கப்பெறும். புதிதாகத் தொழில் செய்ய விரும்புவோருக்கு காலதாமதம் ஏற்படும். வீட்டில் பலவித முன்னேற்றங்களையும், அலங்காரங்களையும் செய்வதில் உற்சாகமாக இருப்பர். தேகசௌக்கியம் அதிகம் பாதிப்படையாது. சிறுசுகக் குறைவுகள் தோன்றினாலும் உடனுக்குடன் நிவாரணமாகும். தூரதேசப் பிரயாணங்களை மேற்கொள்ள விரும்புவோருக்கு இன்னும் காலம் கனியவில்லை. திருமணம் முதலியன தாமதத்தின் மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் வசதியான இடமாற்றங்களைப் பெறுவர். விவசாயிகளும் அதிகரித்த இலாபம் அடைவர். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியும், பாராட்டுக்களும் பெறுவர்.

# தெற்காசியாவின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தானை அமெரிக்கா நம்புகிறதா?

(நேற்றைய தொடர்ச்சி.....)

பாகிஸ்தானில் இந்த வகையில் பெற்ற உதிரிப்பாகங்கள்மூலம், தயாரித்த M 11 ஏவுகணைகளில் 30 ஏவுகணைகளை, லாகூர் நகருக்கு மேற்கேயுள்ள சரகோடா விமானப்படை முகாமில் சேகரித்து வைத்துள்ளது. லாகூர் இருப்பது இந்திய எல்லை



யின் அம்ரிட்சர் நகருக்கு மிக அருகில். வேறொரு தகவலின்படி, பாகிஸ்தான் சீனாவிடமிருந்து உதிரிப்பாகங்களாகப் பெற்ற 30 m 11 தொழில்நுட்பத்தைப் புரிந்து கொண்டு, அச்சு அசலான பிரதிகளாக, தாங்களே சொந்தமாகச் சில ஏவுகணைகளைத் தயாரித்ததாகவும், இந்த வகையில் மொத்தம் 84 ஏவுகணைகள் விமான நிலைய ஸ்ரோரேஜில் இருப்பதாகவும் கூறப்பட்டது. இந்தநிலையில் பாகிஸ்தான் சீனா உறவு நெருக்கமாக, அது வேறோர் தொழில்நுட்பத்தையும் சீனாவிடமிருந்து பாகிஸ்தானுக்குப் பெற்றுக் கொடுத்தது. கைமாறிய தொழில்நுட்பம் - ஒரு சீனனின் புளூ பிறின்ற்.

இது 1966 ஆம் ஆண்டு டிசைன் பண்ணப்பட்ட U-2 nuclear imporation device இன் தயாரிப்பு வரைபடமாகும்.

சீனா தனது நான்காவது அணு வாயுதப் பரிசோதனையை 27 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 1966 ஆம் ஆண்டு நடத்தியபோது, அதற்கு U2 ரக ஏவுகணையைப் பயன்படுத்தியிருந்தது. DF 2 ரக ஏவுகணையில் அப்போது பயன்படுத்தப்பட்ட வோகெட் இந்த U2 தான். அதன் வரைபடம் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளின் பின்னர், பாகிஸ்தானின் கையில் போய்க் கிடைத்திருக்கிறது. சீனாவிடமிருந்து பாகிஸ்தானுக்கு M 11 ஏவுகணைத் தொழில்நுட்பமும், உதிரிப்பாகங்களும் போய்ச்சேர்ந்து. M11 தயாரானதும், அதே காலப்பகுதியில் u 235 இன் புளூ பிறின்ற் கைமாறியதும், சி.ஐ.ஏக்கு தெரியவந்ததும், அதை சி.ஐ.ஏ பெரிதாக எடுக்கவில்லை. காரணமென்னவென்றால், ஒருவேளை பாகிஸ்தானில் U 235 ஐ வைத்து, அணுஆயுதம் தயாரிக்க முடிந்தாலும், U 235 நிறை கிட்டத்தட்ட 1300 Kg ஆக இருக்கும். இந்த நிறை M 11 ஏவுகணையின் நிறைக்கு மிகமிக அதிகம். M 11 இன் ஆகக் கூடிய (maximum) நிறை 800 Kg தான். எனவே M 11 ஐயும் U 235 ஐயும் சேர்த்து, எதுவுமே செய்ய முடியாது என்று சி.ஐ.ஏ விட்டுவிட்டது.

இந்தியாவும் றோ மூலம் இதை அறிந்திருந்தும், இது பற்றிப் பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை. என்ன காரணம் M 11 இன் வீச்செல்லை அப்படி. பாகிஸ்தான் M 11 ஐ வைத்து இயக்க சாத்தியமுள்ள இடத்திலிருந்து இந்தியத் தலைநகரம் புதுடெல்லியோ, வேறு பெரு நகரங்களோ இருக்கும் தூரம் M 11 இன் வீச்செல்லையான 300 கிலோமீற்றரை விட அதிகதூரம்.

இதற்கு இடையே பாகிஸ்தான் தனக்குக் கிடைத்த U 235 புளூ பிறின்ற் ஐ வைத்து - கொஞ்சம் மாற்றங்கள் செய்து, U 235 இன் 1300 Kg நிறையைக் குறைத்து, 450 Kg நிறையுடைய வோசேற் ஒன்றைத் தயாரித்ததாகக் கூறப்பட்டது.

அப்படித் தயாரான வோசெற் M11 இல் பொருத்தப்பட்டு, ஏவப்படலாம் என்பது சாத்தியமானாலும், இந்தியாவிற்கு அப்போதும் தூரம் காரணமாக கவலை இருக்கவில்லை. ஆனால், அமெரிக்கா அதனை இலேசில் விட்டுவிடத் தயாராயில்லை. உடனடியாகவே 1991 இல் சீனா மீதும், பாகிஸ்தான் மீதும் பொருளாதாரத்தடை ஒன்றை விதித்தது. அமெரிக்கா M11 ரக ஏவுகணை உதிரிப்பாகங்களையும், தளபாடங்களையும் வியாபாரம் செய்தது என்று காரணங்காட்டி, நான்கு வருட பொருளாதாரத்தடையை விதித்தது.

ஆனால், அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு அந்தக் காலப்பகுதியில் சீன இறக்குமதி மிகமிக அவசியமாகிருந்தது. சீனாமீது இருந்த நான்குவருடப் பொருளாதாரத் தடையை சத்தம்போடாமல் 1992 இலேயே விலக்கிக்கொண்டது அமெரிக்கா. ஆனால், பாகிஸ்தான் மீதான தடையை நீக்கவில்லை. அதாவது ஆயுதம் விற்ற நாடு மீதான தடை நீக்கப்பட்டுவிட்டது. ஆயுதம் வாங்கிய நாட்டின்மீதான தடை நீக்கப்படவில்லை.

பாகிஸ்தான் பலமுறை மேன்முறையீடு செய்தும், கடைசி வரை அமெரிக்கா விதித்த நான்கு வருட பொருளாதாரத்தடை நீக்கப்படாமல், அது 1995 இல் தானாகவே முடிவுக்குவரும்வரை நீடித்தது.

இது பாகிஸ்தானுக்கு உள்ளூரக் குமுறலை ஏற்படுத்தி இருந்தாலும், அமெரிக்காவை எதிர்த்து எதுவும் செய்யமுடியாமல் காத்திருந்தது. பூனைக்கொரு காலம் வரட்டும் என்று.

பாகிஸ்தானின் இந்த ஏவுகணைத் திட்டம் ஆரம்பத்தில் எங்கு செயற்படுகின்றது என்று தெரியாமல் இருந்தது சிலகாலம். பின்னர் பாகிஸ்தானின் அரசு அமைப்பான N.D.C. எனப்படும் National Defence Complex இன் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. என்.டி.சி. சுயாதீன அமைப்புப்போல, வெளியே காட்டப்பட்டாலும் அது இயங்கியது 'பற்' எனப்படும் அணுசக்தி கமிஷனின் ஒரு தேடுதல் உதவியாக.

1995 இல் என்.டி.சியிடம் இந்த உற்பத்தி வேறுசில தொழில்நுட்ப இறக்குமதிகளுடன் 'சகீம்' புறொஜெக்ட் என்ற பெயரில் முழுமையாகக் கொடுக்கப்பட, ஏவுகணை 'சகீம்' என்ற பெயரில் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இந்த இடத்தில் பாகிஸ்தான் ஒரு வினோதமான காரியத்தைச் செய்தது. சகீம் புறொஜெக்ட் பற்றியும், அது திட்டமிடப்படும் இடம், தயாரிக்கப்படும் இடம், அதன் வீச்செல்லை என்ற நுணுக்கமான விடயங்களையெல்லாம் விலாவாரியாக வெளியுலகத்துக்குத் தெரிவித்தது.

பொதுவாக எந்தவொரு நாடும் தேசிய பாதுகாப்பு, ரகசியக்காப்பு அவசியம் கருதி, ஏவுகணைத் தயாரிப்புக்களையோ, ஆராய்ச்சிகளையோ இரகசியமாகவே வைத்திருக்கும். ஆனால், பாகிஸ்தான் சகீம் ஏவுகணை விடயத்தை வெளிப்படையாகப் போட்டு உடைக்கக் கிளம்பியமைக்கு இரண்டு காரணங்களைச் சொல்லுகின்றார்கள்.

ஒன்று - பாகிஸ்தான் இரகசியமாக செய்யமுயன்ற திட்டம் பற்றிய அநேக விபரங்கள், இந்தியாவரை சென்றுவிட்டதைப் பாகிஸ்தான் தெரிந்துகொண்ட பின்னர்தான், பாகிஸ்தான் -இனி மறைத்துப் பிரயோசனமில்லை என்று வெளியிட வேண்டி வந்தது என்கிறார்கள்.

**கனடாவிலிருந்து ரிவி**

மற்றையது - பாகிஸ்தான் வெளிப்படையாகக்கூறும் சகீம் அடிப்படைத் தயாரிப்பு ஒரு வெளிப் போர்வைதான் என்றும், சகீம் அடிப்படை அமைப்பைத் தயாரிக்கப் பட்டாலும், யுத்தத்தில் பயன்படுத்தப்படும்போது, முற்றிலும் வேறு விதமான அமைப்பில், வேறுவிதமான தாக்குதல் தலையுடன் உடனும் பறக்கும்படியாகப் பாகிஸ்தான் உள்ளூர் தொழில்நுட்பமொன்றை கடைசி நேரத்தில் சேர்க்கப்படலாம்.

(தொடரும்.......)

# துருக்கித் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்

## 30 பேர் பலி, 450 பேருக்குமேல் காயம்

துருக்கியின் தலைநகர் இஸ்தான் புல்லில் பிரித்தானிய தூது வராலயம், வங்கிக்கட்டடம் ஆகியன அமைந்துள்ள பகுதியில் நடைபெற்ற ஐந்துக்கும் மேற்பட்ட தற்கொலைத்தாக்குதலில் 30 பேர்வரை கொல்லப்பட்டும் 450 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தை தலைமையாகக் கொண்டிருந்த வங்கியின் 15 மாடிகளைக் கொண்ட கட்டடத்தின் கீழ்ப்பாகத்தில் வியாபார மையங்கள் அமைந்துள்ளன இதனால், குண்டுத் தாக்குதல் நடைபெற்றபோது, அதிக மக்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இரத்தம் தோய்ந்த உடைகளுடன் மக்கள் கதறி அழுத வண்ணம் நாற்புறமும் சிதறி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நிமிடங்களில் பிரித்தானிய தூதுவராலய குண்டுவெடிப்பு நிகழ்ந் தது. தீயணைக்கும் படையினர் உடன் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்லமுடியாதிருந்ததென, தூதுவராலயத்திற்கு அருகிலமைந்துள்ள பாடசாலையில் ஆங்கில ஆசிரியையாகக் கடமைபுரியும், கிரிஸ்கி ரிற்ரோஷ் தெரிவித்தார்.

கட்டட இடிபாடுகளுக்கிடையில் பலர் சிக்கியுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. துருக்கியின் செய்தி ஸ்தாபனம் ஒன்றிற்கு கிடைத்த தொலைபேசி அழைப்பில் இந்தத் தாக்குதலுக்கு ஒஸாமா பின்லேடனின் அல்கொய்டா அமைப்பினரே பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் வெளிநாட்டு அமைச்சர் அப்துல்லாகல் தெரிவிக்கும்போது, இந்தத் தாக்குதல்களினால் தீவிரவாதிககளின் நடவடிக்கைகளுக்கு பணியப்போவதில்லை எனத் தெரிவித்தார்



துருக்கியில் அண்மையில் யூதர்களின் வழிபாட்டுத்தலத்தில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

## ஐவர்பலி, 40 பேருக்குமேல் காயம்!



ஈராக்கின் வடபகுதியான "திக்கிரிட்" இல் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டும், நாற்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் - குர்திஸ்தான் அமைப்பின் தலைவர் 'யலால் தல பானியின் அலுவலகத்தை குறிவைத்தே நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.ஈராக்கில் ஆளும் நிர்வாக சபையில் தலைவராக அமெரிக்காவினால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குண்டு பலத்த சத்ததுடன் வெடித்ததாகவும், வான்நோக்கி கரிய புகை மண்டலம் பரவியதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்தக் குண்டுத் தாக்குதல் 'சுனி' முஸ்லிம் இனத்தின் தலைவர் செக் அமெர் அலி சுலைமானின் வீட்டுக்கருகாமையில் நடைபெற்றது. அமெரிக்க சார்பு ஈராக் அரசிற்கு இவர் ஆதரவை வழங்கிவருகிறார்.

இதேவேளை, முன்னாள் ஈராக் அதிபர் சதாம் ஹுசேனிற்கு ஆதரவு தெரிவிக்கும் போராளிக் குழுக்களுக்கு எதிரான தாக்குதல்களை அமெரிக்கப் படையினர் அதிகரித்துள்ளார்கள். கடந்த வியாழக்கிழமை "ரமடி" பகுதியில் அமெரிக்கப் படையினரை தாக்கமுற்பட்டபோது 8 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டும், ஐவர் காயத்திற்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





துருக்கியில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் கட்டடங்கள் தீப்பற்றி எரிவதனை மேற்படத்திலும், அந்தச் சம்பவத்தில் இறந்தவர்களை துருக்கிப் பொலிஸார் தூக்கிச் செல்வதனை கீழுள்ள படத்திலும் காணலாம்.

# உலக நோக்கு

## போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு இஸ்ரேல், இஸ்லாமியக்குழுக்கள் இணக்கம்



பலஸ்தீனப் போராளிக் குழுவான கமாஸும், இஸ்ரேலிய ஜிகாட்டும் இஸ்ரேல் அரசும் எகிப்தில் போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள உடன்பட்டுள்ளது.

எகிப்தியரை நடுவராகக் கொண்டு கைரோவில் டிசம்பர் 2 ஆம் திகதி போர் நிறுத்தத்தை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளன.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் பக்தா அமைப்பும், கைரோவில் நடைபெறவுள்ள சமாதானப்பேச்சில் பங்குகொள்ளத் தீர்மானித்துள்ளது.

சென்றவாரம் பலஸ்தீனத்தில், அரசொன்றை அமைத்தபின் அதன் பிரதமர் 'அகமட்கூரே' எகிப்திய நடுவர்களின் உதவியுடன் கமாஸ், இஸ்லாமிய ஜிகாட் ஆகிய தீவிரவாதக்குழுக்களை, போர்நிறுத்தம் ஒன்றுக்கு இணங்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்க செயலாகக் கருதப்படுகின்றது.

தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை முதலில் ஏற்படுத்தவுள்ளதாக, கூரே மேலும் தெரிவித்துள்ளார்.

### அல்கொய்டாவுடன் தொடர்புள்ள

## பிரித்தானிய பிரஜைகளை சொந்த நாட்டில் விசாரிக்க முடிவு

கியூபாவின் தீவான குவன்ரமோவில், சிறைவைக்கப்பட்டுள்ள அல் கொய்டா இயக்கத்துடன் தொடர்புடைய பிரித்தானிய பிரஜைகளின் விசாரணைகளை, பிரித்தானியாவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அன்மையில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும், இராஜாங்க அமைச்சர் கொலின் பவலும் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்தபோது, இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது, 9 பிரித்தானியர்கள் குவன்ரமோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பலமுறை விசாரிக்கப்பட்டும், சட்டத்தரணிகளை தமக்கு நியமித்துக்கொள்ள முடியாதநிலையில் இருப்பதாக, பிரித்தானிய சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார். தமது எதிரியுடன் இணைந்து போராடிய காரணத்தால், சட்ட உதவிகளை வழங்குவதற்கு இவர்கள் அருகதையற்றவர்கள் என அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

# ஊர்சுற்றி எழுதுவது

வீட்டுமுற்றத்தில் அழகழகான பல வர்ணங்களில் குறோட்டன் செடிகள், பல வர்ணங்களில் எக்ஸோரா பூச்செடிகள், மல்லிகை, முல்லை, செம்பருத்தி, என்ற சிதம்பரத்தை பூச்செடிகளும், பல வர்ணங்களில் இவற்றோடு வீட்டுக்கு திருஷ்டி படாமல் பல வித கள்ளிச் செடிகள், கடதாசிப்பூ என்ற போகன்விலாச் செடிகள் இவை பார்ப்பதற்கு கண்களுக்கு குளிர்ச்சியாக இருக்கின்றன. இவற்றுடன் பூச்சாடிகளுடன் வைக்கப்பட்ட அழகான ரோஜாச் செடிகள்.

இவற்றுக்கு பசளை இட்டு பூச்சி அரிக்காமலும், வெளியார் வந்து இவற்றில் பூப் பிடுங்கிச் சென்றுவிடாமலும் காவல் காத்து, இந்தச் செடிகள் களவுபோகாமல் இருப்பதற்காக நாய் வளர்த்து மக்கள் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் செலுத்தி அழகுக்கலையைப் பேணுகின்றனர்.

போரினால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் குண்டு வீச்சில் அழிந்து, சிதைந்து கிடப்பதைப் பார்ப்பதற்கே சகிக்கவில்லை.

சில பகுதிகளில் இடிந்த வீடுகளின் சிதைவுகள் ஒரு புறமாக ஒதுக்கப்பட்டு, தற்காலிகமாக கொட்டிலோ, தங்குமிடமோ அமைத்துக் கொண்டிருந்தாலும் வீட்டு முற்றத்தில் மலர்ச் செடிகள் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் மழை விழுந்தது தான் தாமதம், வீட்டு முற்றத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்த அத்தனை செடிகளும் கத்தரிக்கப்பட்டு, அப்புறப்படுத்தப் பட்டன. அப்புறப்படுத்தப்பட்ட அத்தனை செடிகளும், கொடிகளும் வீட்டு வாசலுக்கு அருகே, வீதிகளில் குவித்துவிடப்பட்டிருக்கின்றன.

வெட்டப்பட்ட செடிகள் அடுத்த மழைக்கு முன்னர் நன்றாக செழித்து பூத்துக்குலுங்கி அழகாக காட்சியளிக்குமாம்.

முன்பு பூத்துக் குலுங்கிய செடிகள், இன்று வெட்டிக் குறைத்து குப்பைகளாக வீதிகளில் குவிந்துள்ளன. இவை மழை நீரிலும், சகதியிலும் தேங்கி நுளம்பு, இலையான் மற்றும் கிருமிகளை உற்பத்தி செய்து நோய் பரவுவதற்கு காலாய்க் கிடக்கின்றன.

வீட்டுமுற்றத்தை அழகுபடுத்துவதற்காக செடிகொடிகளை வெட்டிக் குறைத்து துப்பரவு செய்பவர்கள் வெட்டிய செடிகளையும் இலைகுழைகளையும் வீட்டு வளவுக்குள்ளேயே வெட்டிப் புதைத்தால் மற்றும் மரம் செடிகொடிகளுக்கும் பசளையாகப் பயன் படுமே!

வீதிகளில் போடும் குப்பைகளும், செடிகொடிகளும் மாநகர சபையாரால் எடுத்துச் செல்லப்பட்ட அடுத்த நிமிடமே அதே இடத்தில் குப்பைகளும், செடிகொடிகளும் வந்து எப்படி குவிந்துவிடுகின்றன என்பது புரியாமல் இருக்கிறது.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே நான் இந்தப் பத்தியில் யாழ் நகரிலுள்ள குளங்களின் நிலையையும், கால்வாய்கள், மதகுகளில் மரம் செடிகள் முளைத்தும், குப்பைகள் நிறைந்து கிடபபதையும் சுட்டிக்காட்டி, மழை வந்தால் இக் கால்வாய்களினூடாக நீர்போக முடியாமல் தேங்கி மக்களுக்கு தொல்லை ஏற்படுத்துமென்று எழுதியிருந்தேன். இப்பொழுதுதான் சில இடங்களில் கால்வாய்கள் துப்பரவுசெய்ய முற்பட்டிருக்கிறார்களாம்.

**நாங்கள் வருமுன் காப்பவர்களல்லர் வந்த பின் காப்பவர்கள் தானே!**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

சமர்ப்பிக்கப்படுமா, படாதா, என்ற சந்தேகத்தில் இருந்த வரவு, செலவுத்திட்டம் ஒருமாதிரி நாடாளுமன்றில் சமர்ப்பித்தாகி விட்டது.

அரச ஊழியர்களுக்கும், ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கும், அரச படையினருக்கும்.. சம்பள உயர்வு, சலுகைகள் கடன்கள் என எவ்வளவோ அறிவிப்புக்கள் பரபரப்பாக வெளியாகியுள்ளன.

விலை அதிகரிப்புகள், வரி அதிகரிப்புக்கள் என வழமையாக வரவு செலவுதிட்ட சமர்ப்பிப்பின்போது வெளியிடப்படும் அதிர்ச்சிச் செய்திகள் எதுவும் வராததில் பலருக்கு தற்காலிக திருப்தி.

பாதுகாப்புச் செலவினம் சென்ற ஆண்டை விடவும் அதிகரித்ததில் சமாதானம் விரும்பிகளுக்கு அதிர்ச்சி.

சம்பளஉயர்வு அதிகரிக்கப்பட்டிருப்பதில் படையினருக்குத் திருப்தி.

மதுபான விலைகள் சிறிது அதிகரித்து இருப்பதனால் 'பெருங்குடி' மக்களுக்கு அதிருப்தி.

விவசாயிகளுக்கு வேளாண்மைக்கடன் வழங்கப்படும்என்று கூறப்பட்டுள்ளது.

"இதெல்லாம்.. அறிவிப்பளவில்தான்.. விவசாயிகளுக்கு எங்கே கடன் கிடைக்கப்போகுது... ஆராவது, பெருங்காணி உரிமையாளருக்குத்தான் கிடைக்கும்". எனப் புறுபுறுக்கிறார் ஒரு நிலமற்ற ஏழை விவசாயி...

"சாமானிய மனிதர்களைப் பற்றி, ஒருபோதுமே நிதியமைச்சர்மார் கவலைப்பட்டதில்லை..." என்றார். ஒரு சாதாரண கூலித்தொழிலாளி.

நிதியுள்ளவர்களுக்குத்தான் வரவு, செலவுத்திட்டம். நிதியற்றவர்களுக்கு அது கிடையாது. இதுதான் ஜனநாயகக் கோட்பாடு என்றார்ஒரு இடதுசாரித் தோழர்....

'எதுவோ.. இந்த வரவு செலவுத்திட்டம் - புலிகள் தமது சமாதானத்தாலும் , போர்நிறுத்த உறுதியாலும் அரசாங்கத்துக்கு கொடுத்த சலுகை' என்றார் மணியண்ணர்.

'நாடுநாடா பிச்சை எடுத்து வரவு, செலவுக்கணக்கு பார்க்கினம்' என்றார் ஒரு அநாமதேயன்....

-தெருவாசி

## மாவீரர் தின நிகழ்வுகளை...

செம்மணன் ஆகியோரும், படைத்தரப்பின் சார்பில், யாழ் மாவட்ட பிரதிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரட்ணசபாபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் விதானகே, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெட்டி தர்மசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், படையினரின் அடாவடித்தனங்கள் எமக்கு மிகுந்த மனவேதனையையும், மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களுடைய உணர்வை மதிக்காது மனதைப் புண்படுத்தும் செயலாகும்.

தென்மராட்சியின் மீசாலை, வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதிகளில் மாவீரர்தின ஏற்பாடுகளை படைத்தரப்பு நேற்று முன்தினம் குழப்பியது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு படையினர் தரப்பில் அவ்வாறான சம்பவங்கள் எதிலும் படையினர் இனிமேல் ஈடுபடமாட்டார்கள் எனவும் - மாவீரர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற படையினர் தமது ஒத்துழைப்பை வழங்குவார்கள் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

மாவீரர்தின அலங்கார வளைவுகள் அமைப்பது மற்றும் மாவீரர் தின நிகழ்வில் தமிழீழத் தேசிய கொடி ஏற்றுவதற்கும் படையினர் அனுமதித்ததுடன், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பொருட்கள் எவற்றையும் இந்த நிகழ்வுகளின் போது படையினர் தடைசெய்யமாட்டார்கள எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டினைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள், வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் சென்று அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொள்ளவும், பின்னர் குடாநாட்டிற்கு திரும்பயேதுவாக, மாவீரர்தின இறுதி நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி முகமாலைச் சோதனைச் சாவடியை நள்ளிரவு 12.00 மணிவரை திறந்து விடுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டது.

இது தொடர்பாக சாதகமான பதிலை படையினரிடம் இருந்து பெற்றுத் தருவதாக போர்நிறுத்த கண்காணிபபுக்குழுவினர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் யாழ் முனீஸ்வரர் ஆலய வீதியில் மாவீரர்தின பதாதைகள் கட்டிய வியாபாரிகளை படையினர் மிரட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியிலும் நேற்று வளைவுகளை அமைக்க முற்பட்டவேளையில படையினர் தடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்காமைக்காக
# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்த முடியாது!

## சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்களை ஜனாதிபதி நியமிக்கவில்லையென - உயர்நீதிமன்றம் அவருக்கெதிராக குற்றப்பத்திரிகை எதையும் அனுப்பமுடியாதென சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சட்டமாக அதிபர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டமா அதிபரின் ஆலோசகராலேயே இது தெரிவிக்கப்பட்டது.

சட்ட உதவிமன்றம் தொடுத்த வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றத்தால், ஜனாதிபதி - தேர்தல் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்கமுடியுமாவென சட்டமா அதிபரைக் கேட்டபோதே அவரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுத்தால் அரசியல் யாப்பின் மூலம் அவர் பாதுகாக்கப்படுவார் எனவும், சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

பல உயர் நீதிமன்றங்கள் இது தொடர்பாக தமது கட்டளைகளை அனுப்பியுள்ளன. எனினும், ஜனாதிபதிக்கு குற்றப்பத்திரிகை அனுப்புவதற்கு நீதிமன்றங்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.-

## அரசியல் கருத்து...

வேண்டுமானால் ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான கருத்துவேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கை சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளரான நோர்வே தமது பணியை இடைநிறுத்தியிருப்பது குறித்து ஜப்பானிய அரசாங்கம் தெளிவாக விளக்கத்தை பெற்றிருக்கிறது.

ஆனாலும், நோர்வே அரசு இலங்கை சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளர் பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதே ஜப்பானின் எதிர்பார்ப்பாகும்.

நோர்வே தொடர்ந்தும் ஏற்பாட்டாளராக இருந்து இந்தச் சமாதான முயற்சியைத் தொடரும் என்று ஜப்பான் நம்புகிறது. இதற்காக எந்தவொரு கால எல்லையும் ஜப்பான் முன்வைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொட ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று ரோக்கியோ சென்றார்.

இவர் யசுசி அகாஷி உட்பட அரச மட்டப் பிரமுகர்களையும் சந்தித்து சமாதான முயற்சிகள் குறிததுப் பேச்சு நடத்தவுள்ளார் என்று குறிப்பிடத்தக்கது.

## அரசியல் முறுகல்...

இந்தக்குழு நேற்றும் இன்றும் கூடி தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் இதற்கு மாறாக, தேசிய அரசோ அல்லது அமைச்சுப்பதவியோ பிரச்சினைக்குத் தீர்வைத் தராது. எனவே, இந்தக்குழுவினது முடிவின் அடிப்படையில், எதிர்வரும் 12 நாட்களுக்குள் ஜனாதிபதியும், பிரதமரும் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவே, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, செய்துகொள்ளப்பட்ட 'லியாம் - பொக்ஸ்' உடன்படிக்கையின்படி, அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்கட்சி விரோமாக நடந்துகொள்ளக்கூடாது என்ற இணக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் பிரதமர் முன்னேற்றகரமான திட்டமொன்றை முன்வைக்க இருக்கின்றார். எனவே, சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்பட வாய்ப்பில்லையென்று அமைச்சர் குறிப்பிட்டார். (10)

## வேலணைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவன் பரிதாபகரமான முறையில் இறந்துள்ளார். கிளிநொச்சி உதயநகரைச் சொந்த இடமாகக்கொண்ட நாகன் பிரதீபன் (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார். வேலணையில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தபோது மின்சார ஒழுக்கு ஒன்றினைச் சீர்செய்ய முற்பட்டவேளை மின்தாக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பலியானவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (111)

## யாழ்ப்பாணத்தில் இன்றும் மழை தொடரும்

### வளிமண்டலத் திணைக்களம் அறிவிப்பு!

யாழ்ப்பாணத்தில் நேற்று பெய்யத் தொடங்கிய மழை இன்று முழுவதும் நீடிப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதாக, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தத் திணைக்களம் நேற்று மாலை விடுத்த செய்திக் குறிப்பில் - மாலை 6 மணியிலிருந்து தொடர்ந்து 36 மணித்தியாலங்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மழைபெய்வதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்குப் பகுதியில் காற்றுடன் கூடிய மழைபெய்யும். அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் கடல் கொந்தளிப்பாக இருப்பதற்கு சந்தர்ப்பம் இருப்பதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டதில் நேற்று முழு நாளும் பெய்த மழை தொடர்பாக திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையம் தெரிவித்த தகவலில் 25.3 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக ஓய்ந்திருந்த மழை, நேற்று மீளவும் தொடங்கியதனால் மக்களின் அத்தியாவசிய செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்தன. (ப)

## பேச்சுவார்த்தை...

போர்நிறுத்தத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

இருந்தபோதிலும், ஏனைய நாடுகளில் போர்நிறுத்தம் அமுலில் இருந்து மீறப்பட்டதுபோல் இலங்கையில் நடக்கவில்லை.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக ஜப்பான் ரோக்கியோவில், இலங்கைக்கு வழங்கவென ஒப்புக்கொள்ளப்பட்ட 4.5 பில்லியன் நிதி கிடைக்காமல் போகும் அபாயம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு வழிகளை ஏற்படுத்தவும், ஒத்துழைப்பு வழங்கவும் தாம் தொடர்ந்தும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## புதிய வரவு...

சம்பள உயர்வு போதுமானதல்ல. 2100 ரூபா அதிகரிப்பை வழங்குவதாக தெரிவித்த அரசாங்கத்தின் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன் - தனியார்துறை ஊழியர்கள் குறித்து, எந்தவிதமான கருத்தையும் வரவு செலவுத் திட்டம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அதேவேளை - விமல் வீரவன்ச உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அரசாங்கத் தரப்பினர், அவரது உரையை குழப்பமுயன்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்னி வரும்...

சந்திக்கவுள்ளார்.

மறுநாள் புதன்கிழமை வன்னி வரும் இவர் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கிளிநொச்சியில் சந்தித்து பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ் பற்றன் கொழும்பில் தங்கியிருக்கும்வேளை இனப்பிரச்சினைக்கான தீர்வும், "ஐரோப்பிய யூனியனின் அனுபவம்" என்ற பொருளிலும் உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, இவரது வன்னி விஜயத்தின்போது புலிகளின் தலைவரைச் சந்திப்பது தொடர்பாக தம்மால் உறுதிப்படுத்த முடியாதென புலிகளின் கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு வியாழன் காலை இவர் சென்னைக்குச் செல்லவுள்ளார்.


(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)

## 7 மேஜர்ஜெனரல்...

அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு இல்லையென்றும், ஜனாதிபதிக்கே கூடுதலாக பாதுகாப்பு அதிகாரங்கள் இருப்பதாகவும உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இதையடுத்து - இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் றொகான் குணவர்த்தன, பிரதித்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி, மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய ஆகியோர் பதவி இழக்கும் நிலையை எதிர்நோக்கியிருந்தனர்.

ஓய்வுபெற்ற பின்னர், சேவை நீடிப்புப் பெற்றிருந்த இந்த ஏழு உயரதிகாரிகளின் பதவிக்காலத்தை ஒரு வருடத்துக்கு அல்லது 55 வயதுவரை சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.